வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வீரமலர்





Email : news@eelanadu.lk | மலர் : 01 | 26.09.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 295 | பக்கங்கள் : 20


03 மூன்றாவது தடுப்பூசி தேவையா?


08 லோஹான் விவகாரத்தை மூடி மறைக்கும் முயற்சி?


09 ஐ. நாவின் நகர்வுகளை முறியடித்ததா அரசின் செயற்பாடுகள்?


13 வில்லியர்ஸின் துடுப்பாட்டம் அழகியலா, வன்முறையா?

# ஜனாதிபதி கோட்டாபய நாடு திரும்பியபின் கொழும்பு அரசியலில் அதிரடி மாற்றங்கள்!

## பங்காளிக் கட்சிகளின் இடையூறுக்கு முற்றுப்புள்ளி

*கொழும்பு, செப். 26*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர், அவருடன் தீர்க்கமான பேச்சு நடத்த ஆளுங்கட்சியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

கெரவலப்பிட்டி மின் நிலைய உற்பத்தி நடவடிக்கைகளை அமெரிக்காவுக்கு வழங்கிய ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படவேண்டுமென அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ , வாசுதேவ நாணயக்கார உட்பட்ட பிரமுகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பிரதமருட

19

# கிளிநொச்சியில் விவசாயி சந்தையில் விழுந்து மரணம்!

*கிளிநொச்சி. செப். 26*

விவசாயி ஒருவர் சந்தைக்குள் விழுந்து மரணமடைந்த சம்பவம் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

விவசாயி ஒருவர் தனது தோட்டத்து மரக்கறிகளை விற்பனைக்கு கொண்டு சென்றவேளை நேற்று தர்மபுரம் சந்தைப் பகுதி

19



# ஊரடங்கு நீடிக்காது!

## ஒக்ரோபர் முதலாம் திகதி நாடு திறப்பு

**கொழும்பு, செப்ரெம்பர் 26**

**தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம், ஒக்ரோபர் முதலாம் திகதி சில கட்டுப்பாடுகளுடன் தளர்த்தப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.**

19

# மருதனார்மடம் பழ வியாபாரி மீது தாக்குதல் நடத்திய நால்வர் கைது!

## இந்தியாவிலிருந்து தேவா, ஜெனி ஆகியோர் இயக்கியதாக தகவல்

*யாழ்ப்பாணம், செப். 26*

மருதனார்மடம் சந்தியில் பழக்கடை நடத்துபவர் மீது கொலைவெறித் தாக்குதல் மேற்கொண்ட வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றை நாட்டிலிருந்து

19

# மாகாண சபைகளில் அங்கம் வகித்த முன்னாள் உறுப்பினர்களுக்கும் நிதி

## கோட்டாபய அரசின் புதிய திட்டம்

*கொழும்பு, செப். 26*

கிராமிய பிரதேச அபிவிருத்திக்காக இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் பிரதேச இணைப்புக்குழுவின் தலைவர்களுக்கும், இறுதி மாகாண சபைகளில் அங்கம் வகித்த உறுப்பினர்களுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் தனித்

19

# எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்று மக்களுக்கு காண்பிக்க விரும்பவில்லை

## கூட்டமைப்பின் பங்காளியான ரெலோ கூறுகிறது

*வவுனியா, செப். 26*

“எங்களுக்கும் வரலாறு இருக்கின்றது. அதனை நாம் கூற முடியும். ஆனால் எங்கள் மக்கள் பாரிய அழுத்தங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருகிறார்கள். எங்களுக்குள் ஒற்றுமை இல்லை எனக் காட்டினால் மக்கள் மனமுடைந்து மிகவும் மோசமான நிலைக்கு செல்வார்கள் என பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

19

# பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்!

## இலங்கை வரும் ஐரோப்பிய ஒன்றிய குழுவிடம் வலியுறுத்துவோம் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

*கொழும்பு, செப். 26*

நாட்டுக்கு வரும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு செவ்வாய்க்கிழமை தமிழ் தேசியக்கூட்டமைப்பை சந்திக்கின்றபோது பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றுமுழுதாக நீக்கவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துவோம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற

19



# ‘ஓம்’ தொலைக்காட்சி ஏற்பாட்டில் திருக்கேதீஸ்வரத்தில் நேற்று யாகம்








யாழ்ப்பாணம்,செப்.26

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நேற்று விசேட யாக வழிபாடு நடத்தப்பட்டது. டான் தொலைக்காட்சிக் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில், இந்த விசேட யாக வழிபாடு நடத்தப்பட்டது.

உலக வாழ் மக்களின் துன்பங்கள் அகலவும், இன்பம், மகிழ்ச்சி பெருகவும், முழுமுதற் கடவுளான சிவனை நோக்கி பிரார்த்தனை செய்யும் வகையில் இப் பெரு யாகம் ஏற்பாடு செய்யப்பட்டது.

காலை சுப வேளையில் ஆரம்பமாகிய யாகத்தின் போது, சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்களை இசைக்க, அக்னி வளர்க்கப்பட்டு, விசேட அபிடேகங்கள் திருக்கேதீஸ்வரநாதருக்கு இடம்பெற்றன.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய குருக்கள் மற்றும் சிவாச்சாரியர்கள், யாழ்ப்பாணம் நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ்ப்பாணம் இந்தியத் துணைதூதரக தூதுவர், டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம், யாழ்ப்பாணம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் சாதனைத் தமிழன் காலாநிதி ஆறு. திருமுருகன், தவத்திரு வேலன் சுவாமி, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், சிரேஸ்ட ஊடகவியலாளரும் ஈழநாடு பத்திரிகையின் ஆலோசகருமான மகாலிங்கசிவம் உட்பட இந்து சமய ஆர்வலர்கள், டான் தொலைக்காட்சிக் குழுமப் பணியாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி இவ் விசேட யாகம் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலக மக்கள் துன்பத்திலிருந்து மீள்வதற்காக, டான் தொலைக்காட்சிக் குழுமத்தின் தலைவர் எஸ்.எஸ். குகநாதனின் வழிகாட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த யாகமானது உலக மக்களுக்கு நன்மை தருவதாக அமைந்தது என்றும், உலக மக்களின் நன்மைக்காக யாகத்தை ஏற்பாடு செய்ய டான் குழுமத் தலைவருக்கு ‘முள்முடித் தீநுண்மி யாக சாலை பெருவழுதி’ எனும் பட்டத்தை சிவசேனை அமைப்பின் தலைவர் க.சச்சிதானந்தம் வழங்கிக் கௌரவித்தார்

## மூன்றாவது...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை 10 கோடி மட்டுமே வழங்கியுள்ளன. இதனால், ஏழை நாடுகளில் தடுப்பூசிக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தச் சீரற்ற நெறிமுறை ஏழை நாடுகளை மட்டுமல்ல, வளர்ந்த நாடுகளையும் தான் பாதிக்கப் போகிறது.

ஏழை நாடுகளில் கொரோனா தொற்று நீடிக்கும்போது, புதுப் புது வேற்றுருவ வைரஸ்கள் உருவாகி, மற்ற நாடுகளுக்கும் பரவ வாய்ப்பிருக்கிறது. தற்போது பயன்பாட் டில் உள்ள தடுப்பூசிகள் அந்த வேற்றுருவ வைரஸ் களுக்குக் கட்டுப்படாமல் போகலாம். மீண்டும் புதிய தடுப்பூசிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட லாம். விளைவாக, நாட்டின் பொருளாதாரம் நலிவடையலாம். ஆகவே, ‘தடுப்பூசி விநியோகம் மற்றும் பயன்பாட்டில் இந்த ஆபத்துகளையும் கவனத்தில் கொண்டு, வளர்ந்த நாடுகள் செயல்படுவது அவசியம். இப்போதைக்கு உலக நாடுகள் மூன்றாம் தவணை தடுப்பூசியைச் செலுத்த அவசியமில்லை’ என்கிறார் டெட்ராஸ்.

உலக அளவில் கொரோனாவுக்குத் தனிமனிதப் பாதுகாப்பு உறுதியானால் மட்டுமே சமூகப் பாது காப்பும் உறுதிப் படும் என்பது அறிவியல் உண்மை. கொரோனா பெருந் தொற்றுக்கு முடிவு கட்டும் பணியில் இணைந்துள்ள அறிவியலாளர்களும் தடுப்பூசி தயாரிக்கும் நாடுகளும் அவசியம் பரிசீலிக்க வேண்டிய அம்சம் இது! - தி இந்து

கல்வி TV CHANNEL-1

19.09.2021
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி TV CHANNEL - 2

19.09.2021
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
26.09.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# தேரர்கள் தயார் நிலையிலா?

நாடு மீண்டும் திறப்படுமா என்னும் கேள்விக்கு இன்னும் உறுதியான பதில்கள் இல்லை. இலங்கைத் தீவை பொறுத்தவரையில் அமைச்சர்கள், மருத்துவ நிபுணர்கள் எதையும் கூறலாம் ஆனால், இறுதி முடிவு ஜனாதிபதியின் தீர்மானத்திலேயே தங்கியிருக்கின்றது. ஆனால், கொரோனாவின் பெயரிலான கட்டுப்பாடுகள் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை தீவிரப்படுத்துகின்றது என்பது எந்தளவு உண்மையோ, அந்தளவிற்கு அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் திரட்சி பெறுவதை தடுப்பதில் அரசாங்கத்திற்கு சாதாகமான ஒன்றாகவும் இருக்கின்றது. ஏற்கனவே இலங்கை ஆசிரியர் சங்கம் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்திருக்கின்றது. கொரோனா தீவிரமாக இருந்த வேளையிலேயே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் மற்றும் முன்னணி சங்க உறுப்பினர்கள் சிலர், கட்டாய தனிமைப்படுத்தலில் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நாடு முழுமையாக திறக்கப்பட்ட பின்னர் தேரர்கள் அணியொன்று அரசாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்குவதற்கு தயார் நிலையிருப்பதாக தெரிகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியில் பெரும் பங்களிப்பு வழங்கிய, கொழும்பு அபயராம விகாரையின் விகாராதிபதி ஆனந்த முத்தேட்டுவ தேரர் மற்றும் சில முன்னணி தேரர்கள் தங்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான தேரர் அணியை தயார் செய்ய முற்படுவதாகவும் சில கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே முத்தேட்டுவ ஆனந்த தேரர் ஜனாதிபதி கோட்டாபயவை கடுமையாக விமர்சித்து வருகின்றார். தாங்கள் தவறானவர்களை ஆட்சிக்கு கொண்டுவந்துவிட்டதாக வெளிப்படையாகவே பேசிவருகின்றார். அதேவேளை, ஏனைய முன்னணி தேரர்கள் சிலரும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

முத்தேட்டுவ ஆனந்த தேரர், இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ‘ரட்ட ரங்கின ஜன கண்ட’ என்னும் அமைப்பொன்றை உருவாக்கியிருந்தார். சீனாவின் கொழும்பு துறைமுக நகர சட்ட மூலத்தை கடுமையாக எதிர்த்திருந்த தேரர், இலங்கை சீனாவின் கொலனியாக மாறிவருவதாக பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கும் அவருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இவருக்கு ஆதரவாக இருக்கின்றனர். தங்களின் தேர்தல் வெற்றிகளை பாதிக்கும் என்று கருதினால், பலரும் சடுதியாக பிக்குகளின் பக்கமாக சென்றுவிடுவர். இது, தென்னிலங்கை அரசியலில் சாதாரணமான ஒன்று.

ஆரம்பத்தில் ஜனாதிபதிமீது பெரும் நம்பிக்கையை வெளியிட்டுவந்த முன்னணி தேரர்கள் பலர், அண்மைக்காலமாக தொடர்ச்சியாக அரசாங்கத்தை குற்றம்சாட்டி வருகின்றனர். இந்த நிலையில், நாடு முழுமையாக திறக்கப்படும்போது தங்களின் எதிர்ப்புக்களுக்கு இவர்கள் செயல் வடிவம் கொடுக்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2015 ஆட்சி மாற்றத்தின்போது சோபித தேரர் முதன்மையான பங்கு வகித்திருந்தார். ஆரம்பத்தில் அவரை ஒரு பொது வேட்பாளராக நிறுத்துவது தொடர்பிலும் பேச்சுக்கள் அடிபட்டன எனினும், தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெறுவதற்கு அது தடையாகிவிடும் என்னும் அடிப்படையில் அந்த ஆலோசனை கிடப்பிற்கு சென்றது. ஆனால், சோபித தேரர்தான் ஆட்சி மாற்றத்திற்கான அணிகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தும் நபராக இருந்தார்.

ஆனால், சோபித தேரரின் பங்களிப்பும் முத்தேட்டுவ தேரரின் பங்களிப்பும் ஒன்றல்ல. முத்தேட்டுவ தேரர் போன்றவர்கள் கடும்போக்கு சிங்கள - பௌத்த தேசியவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். அவர்களின் ஆதரவுடன்தான் ஜனாதிபதி தனிச்சிங்கள வாக்குகளால் வெற்றிபெறவும் முடிந்தது. ஆனால், தேர்தலின் பின்னர் ஏற்பட்ட உள் முரண்பாடுகளின் காரணமாக குறித்த தேரர்கள் அரசாங்கத்திற்கு எதிராக திரும்பியிருக்கின்றனர். இதன் விளைவு நிச்சயம் அடுத்த தேர்தலில் பிரதிபலிக்கும். அதற்கிடையில் ஏதும் அதிசயங்கள் நிகழாவிட்டால்!

# மூன்றாவது தடுப்பூசி தேவையா?

*கொரோனா பேரழிவைத் தடுக்க, 183 உலக நாடுகளில் கொரோனா தடுப்பூசிகளைச் செலுத்தத் தொடங்கி ஓராண்டு நெருங்குகிறது. தற்போது கொரோனாவுக்கு 18 வகையான தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றில் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசி மட்டும் ஒற்றைத் தவணை தடுப்பூசி. மற்ற அனைத்தும் இரண்டு தவணைகள் செலுத்தப்பட வேண்டியவை.*



*ஆனாலும் அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் ‘ஊக்குவிப்பு ஊசி’* (Booster dose) *எனும் மூன்றாம் தவணை தடுப்பூசியைச் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இதைத் தொடர்ந்து மற்றைய நாடுகளிலும் மூன்றாம் தவணை தடுப்பூசி தொடர்பான விவாதம் ஆரம்பித்திருக்கிறது.*

**காரணம் என்ன?**

*மூன்றாம் தவணை தடுப்பூசி பேசு பொருளாவதற்கு மூன்று முக்கியக் காரணங்கள். இரண்டு தவணைகள் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு, கொரோனாவுக்கான எதிர்ப்பு சக்தியானது 6இலிருந்து 10 மாதங்களுக்குப் பிறகு குறையத் தொடங்குவது முதல் காரணம். அடுத்து, நாட்பட்ட நோய்கள் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு, கொரோனா தடுப்பூசி இரண்டு தவணைகள் செலுத்தப்பட்ட பிறகும், போதுமான அளவுக்கு ரத்த எதிரணுக்கள்* (Antibodies) *அதிகரிப்பதில்லை என்பது இரண்டாவது காரணம். கொரோனா வைரஸின் உருவ அமைப்பு அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பதால், புதிய வேற்றுருவங்கள்* (Variants) *தற்போதைய தடுப்பூசிகளுக்குக் கட்டுப்படுமா எனும் சந்தேகம் மூன்றாவது காரணம்.*

**ஆய்வாளர்கள் கூறுவதென்ன?**

*தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு மீண்டும் கொரோனா தொற்று ஏற்பட்டாலும் கோவிட் நோய் கடுமையாவதில்லை உயிராபத்து நெருங்குவதில்லை தடுப்பாற்றல் நினைவு செல்கள் மூலம் நாட்பட்ட பாதுகாப்பு கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது. இந்த மூன்று நன்மைகள் உலக அளவில் உறுதிசெய்யப்பட்டுள்ளன. ஆகவே, தடுப்பூசிகளைப் பொறுத்தவரை இரண்டு தவணைகள் செலுத்திக்கொண்டோர் அனைவருக்கும் மூன்றாம் தவணை தேவைப்படுவதில்லை என்பது சர்வதேசத் தடுப்பாற்றல் ஆய்வாளர்களின் பொதுவான கருத்து.*

*நோய் எதிர்ப்புச் சக்தி குறைகிற குறிப்பிட்ட பிரிவினருக்கு வேண்டுமானால் அது தேவைப்படலாம். அப்படியானால், எந்தப் பிரிவினருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாக பலவீனமடைகிறது என்பதை முதலில் கண்டறிய வேண்டும். தகுதியானவர்கள் அனைவருக்கும் இரண்டு தவணைகள் தடுப்பூசியைச் செலுத்திய பிறகுதான் இது குறித்து முடிவெடுக்க முடியும். மேலும், மூன்றாம் தவணை தடுப்பூசியின் அளவு என்ன, அதைச் செலுத்தினால் எவ்வளவு காலத்துக்கு நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கும், பயனாளிக்குப் பாதுகாப்பு எப்படி இருக்கும் என்பது போன்ற கேள்விகளுக்குச் சரியான பதில்கள் இப்போது இல்லை. இவற்றுக்கெல்லாம் எதிர்கால ஆராய்ச்சிகள்தான் முறையான பதில்களைத் தர முடியும்.*

*மேலும், ‘சயன்ஸ்’ ஆய்விதழில் வெளியாகியுள்ள புதிய தகவல்கள் என்னவென்றால், ஏற்கெனவே கொரோனா தொற்று ஏற்பட்டவர்களுக்கு எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசி செலுத்திய பிறகு உருவாகும் எதிரணுக்கள், மற்றவர்களை விடப் பல மடங்கு அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன என்பது. அடுத்து, இந்த எதிரணுக்கள் தற்போதுள்ள கரோனா வேற்று ருவங்களுக்கு எதிராக 100 மடங்கு அதிகமா கத் தடுப்பாற்றலைத் தருகின்றன என்பது. அமெரிக்காவில் ‘லா ஜொல்லா இன்ஸ்டி டியூட்’* (La Jolla Institute) *வைரஸ் வல்லுநர் டாக்டர் ஷேன் கிராட்டியின்* (Dr. Shane Crotty) *ஆராய்ச்சியில் தெரிய வந்த நம்பிக்கை தரும் தகவல்கள் இவை. இவ்வகைத் தடுப்பாற்றலுக்குக் ‘கலப்புத் தடுப்பாற்றல்’* (Hybrid immunity) *என்று பெயர்.*

**உலக சுகாதார நிறுவனத்தின் கருத்து**

*பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள நாடுகள் பலவும் மூன்றாம் தவணை தடுப்பூசிக்குத் தயாராகும் நிலையில், அவர்கள் கவனிக்க வேண்டிய கருத்து ஒன்று உள்ளது என்கிறார் உலக சுகாதார நிறுவனத்தின் பொது இயக்குநர் டெட்ராஸ். கொரோனா தடுப்பூசி விநியோகத்தில் உலக நாடுகள் ‘சரிசம நெறி’யைக் கடைப்பிடிக்கவில்லை என்பதுதான் அது. முக்கியமாக, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பல நாடுகளில் ஒரு சதவீதம் கூட கொரோனா தடுப்பூசி இன்னும் செலுத்தப்படவில்லை. உதாரணத்துக்கு, உலகில் இதுவரை 588 கோடித் தடுப்பூசித் தவணைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றால், அவற்றில் முக்கால்வாசி 10 நாடுகளுக்கு மட்டுமே பயன்பட்டுள்ளது. அமெரிக்காவில் 54% பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றால், ஆப்பிரிக்காவில் 3.5% பேருக்கு மட்டுமே செலுத்தப்பட்டிருக்கிறது. அங்கு சுகாதாரத் துறையினருக்கும் முன்களப் பணியாளர்களுக்கும்கூட இன்னும் முழுமையாகத் தடுப்பூசி செலுத்தப்படவில்லை.*

*அதேநேரம், வளர்ந்த நாடுகள் பலவும் கொரோனா தடுப்பூசிகளைப் பெருமளவில் வீணாக்கியுள்ளன. கடந்த மார்ச் மாதம் வரை அமெரிக்காவில் ஒன்றரைக் கோடி, பிரிட்டனில் 8 லட்சம் தவணைக்கான தடுப்பூசிகள் வீணாகியுள்ளன. இந்தியாவிலும் கரோனா தடுப்பூசியைக் கொண்டுவந்த புதிதில் இவ்வாறு வீணாக்கப்பட்டதை அறிவோம். அடுத்து, ‘கோவேக்ஸ்’ ஒப்பந்தப்படி ஜி7 நாடுகள் 87 கோடித் தவணை தடுப்பூசிகளை ஏழை நாடுகளுக்குத் தருவதாக ஒப்புக் கொண்டதில்,*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# ஜேர்மனிக்கு இடதுசாரித் தலைமை? இன்று தேர்தலில் முடிவு தெரியும்

## நிதி அமைச்சர் ஓலா:ப் ஸ்கோல்ஸ் அடுத்த அரசுத் தலைவராக வாய்ப்பு?



*பாரிஸிலிருந்து* **குமாரதாஸன்**

ஐரோப்பாவின் பொருளாதார வல்லமை மிக்க ஜேர்மனி நாட்டின் நாடாளுமன்றத்தையும் அரசுத் தலைவரையும் தெரிவு செய்கின்ற தேர்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அங்கெலா மெர்கலின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி (CDU) தலைமையில் 16 ஆண்டு காலம் நீடித்த பழமைவாதிகள் ஆட்சியை இன்றைய தேர்தல் முடிவுக்குக் கொண்டுவரும் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன. அது நடந்தால் ஜேர்மனியின் சான்சிலர் (Chancellor) எனப்படும் அரசுத் தலைவர் பதவி 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் இடதுசாரிக் கட்சியின் கைகளுக்கு மாறுகின்ற வாய்ப்புக்கள் தெரிகின்றன.

நாட்டின் மிகப் பழைய கட்சியாகிய மைய இடதுசாரி சமூக ஜனநாயகக் கட்சியின் (centre-left Social Democratic Party - SPD) தலைமையில் கூட்டணி ஆட்சி ஒன்று அமையக்கூடும் என எதிர்வுகூறப்படுவதால் அந்தக் கட்சியின் வேட்பாளராகிய 63 வயதுடைய ஓலாஃப் ஸ்கோல்ஸ் (Olaf Scholz) நாட்டின் சான்சிலராகப் பதவிக்கு வருவதற்கு வாய்ப்புள்ளது. அவரது சமூக ஜனநாயகக் கட்சி அங்கெலாவின் தற்போதைய கூட்டணி அரசில் அங்கம் வகிக்கிறது. அங்கெலாவின் அரசில் ஸ்கோல்ஸ் தற்போது நிதி அமைச்சராகவும் பிரதி சான்சிலராகவும் இருக்கிறார்.

கொரோனா வைரஸ் நெருக்கடி காலப் பகுதியில் நாட்டின் நிதி நெருக்கடிகளை சிறப்பாகக் கையாண்டார் என்ற காரணத்தினால் நாட்டு மக்கள் மத்தியில் அவரது செல்வாக்கு உயர்ந்திருந்தது. எனினும் நிதி அமைச்சர் என்ற வகையில் அவரது அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற இரண்டு பெரிய ஊழல் முறைகேடுகளைத் தடுக்கத் தவறிவிட்டார் என்று தேர்தல் பிரசார காலத்தில் அவர் மீது குற்றச் சாட்டுகள் கிளப்பப்பட்டன.அவை தொடர்பான விசாரணைகள் அவரது கழுத்தை இறுக்கும் ஆபத்து உள்ளது.

கொரோனா தொற்றுநோய்க்குள் நாட்டின் தொழிற்துறைகளையும் தொழிலாளர்களையும் பாதுகாப்பதற்காக ஓலாஃப் ஸ்கோல்ஸ் தயாரித்த சுமார் 750 பில்லியன் ஈரோக்கள் அடங்கிய அவசரகால நிதித் திட்டம் பெரும் நெருக்கடிக்குள் இருந்து நாடு மீண்டுவர உதவியது என்று மதிப்பிடப்படுகிறது.

அங்கெலா அம்மையார் வைரஸ் தொற்றுக்குள்ளாகி இருந்த சமயங்களில் அரசின் முக்கிய கூட்டங்களை அவரே தலைமை வகித்து நடத்தியிருந்தார். 1998 இல் முதல் முறையாக மத்திய நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருந்தவர் ஸ்கோல்ஸ்.(ஜேர்மனிய மொழியில் நாடாளுமன்றம் Bundestag என்று அழைக்கப் படுகிறது.) அதன் பிறகு 2011-2018 காலப் பகுதியில் நாட்டின் ஹம்பேர்க்(Hamburg) நகரின் மேயராகவும் விளங்கியவர்.

பதவிக்கு வந்தால் பிரான்ஸுடனான உறவுகளைத் தொடர்ந்தும் அதே நெருக்கத்துடன் முன்னெடுக்கக் கூடியவர் அவர் என்று பிரெஞ்சு தலைவர்கள் நம்புகின்றனர். ஓலாஃப் ஸ்கோல்ஸின் சகோதரர் மருத்துவர் ஜென்ஸ் ஸ்கோல்ஸ் (Jens Scholz) கொரோனா நெருக்கடி காலத்தில் பிரான்ஸில் இருந்து அவசர நோயாளர்களை ஜேர்மனிக்கு இடம்மாற்றிச் சிகிச்சையளிப்பதற்கு நேரடியாகக் களத்தில் நின்று உதவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2005 இல் அப்போதைய இடதுசாரி சான்சிலர் ஜெர்ஹார்ட் ஷ்ரோடர் (Gerhard Schröder) அவர்களது சகாப்தத்தின் பிறகு அந்தப்பதவியில் அமரப்போகின்ற இடதுசாரியாக நோக்கப்பட்டாலும், ஓலாஃப் ஸ்கோல்ஸ் பெரும்பாலும் அங்கெலா கூட்டணி அரசின் பழமைவாதக் கொள்கைகளை ஆதரித்துவந்தவர் என்று அவரது எதிர்ப்பாளர்கள் விமர்சிக்கின்றனர்.



அங்கெலாவுக்குப் பின் அவரது வாரிசாக வரக்கூடியவர் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டவர் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அர்மின் லாசெற் (Armin Laschet). ஆனால் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் காலங்களில் அவரது தனிப்பட்ட செல்வாக்கு சரிவுகளைச் சந்தித்தது. நாட்டை உலுக்கிய மழை வெள்ள அனர்த்தத்தின்போது அழிவுகளைப் பார்வையிட்ட சமயத்தில் அவர் நகைச்சுவை ததும்ப சிரித்துப்பேசிய காட்சிகள் வெளியாகிக்கடும் விமர்சனங்களைக் கிளப்பி இருந்தன. எனினும் கடந்த சில நாட்களாக அதிபர் அங்கெலா மெர்கல் அவரது கட்சியின் இறுதிப் பிரசாரக் கூட்டங்களில் அர்மின் லாசெற்றுக்கு ஆதரவாக் குரல் எழுப்பியிருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற தேர்தலின் முடிவுகள் அன்றிரவு முதல் தெரிய வந்தாலும் அடுத்த சான்சிலர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்குச் சில தினங்கள் செல்லலாம். ஜேர்மனிய வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கும் தாம் விரும்பிய கட்சிக்கும் என இரண்டு வாக்குகளைச் செலுத்த முடியும். ஆனால் புதிய சான்சிலரை அவர்கள் நேரடியாகத் தெரிவு செய்வதில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுகின்ற கட்சி அல்லது கட்சிகள் அடங்கிய கூட்டணியே அடுத்த அரசுத் தலைவரைத் தெரிவு செய்யும். ■




**மேடம்**
புதிய முயற்சிகளில் தாமதமான வெற்றி கிடைக்கும்.திட்டமிட்ட பயண வாய்ப்புகள் இப்போதைக்கு இல்லை.மாணவர்களுக்கு கல்வியில் சற்று கவனம் தேவை.

**இடபம்**
உங்களின் முன்னேற்றத்துக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு வெற்றி உண்டு.குடும்பத்தில் உயர்கல்விக்கு முயல்வோருக்கு முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்**
இளைஞர்களின் முயற்சியில் சிறிதளவு வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மனதில் கற்பனை பயம் உண்டாகும். கவனம் தேவை.

**கடகம்**
சுபநிகழ்ச்சிகள் பற்றிய முயற்சியில் தாமதமான பலன் ஏற்படும். காதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியான திருப்பம் உண்டு. விடாமுயற்சியால் வெற்றி கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**சிம்மம்**
கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். பெண்களுக்கு கூடுதல் நன்மை உண்டு. சேமிப்பு உயரும். பயம் நீங்கும். சந்தோஷ சம்பவம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை, நலம் அடைவீர்கள்.

**கன்னி**
பணியாளர்களுக்கு அலுவலக ரீதியில் திருப்தியான நிலை ஏற்படும். ஒவ்வொரு செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள் இது. அவப்பெயர் நேராமல் கவனமாக அடிஎடுத்து வையுங்கள்.

**துலாம்**
வீண் பேச்சு, வம்பைத் தவிர்த்து மவுனமாக இருங்கள். தொழில் செய்பவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். குடும்ப உறுப்பினர்களிடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
குழந்தைகளை கண்காணிப்பில் வைத்திருப்பது நல்லது. எடுத்த முயற்சியை சிரமப்பட்டு வெற்றிகரமாக முடிப்பீர்கள். இரண்டு நாளாக இருந்த மன உளைச்சல் நீங்கி மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு**
சகஊழியர்களின் பொறாமை பற்றி கவலைப்பட வேண்டாம். வியாபாரத்தில் வருமானம் ஏற்ற, இறக்கமாக இருக்கும். ஒவ்வொரு செயலையும் கவனமாகச் செய்ய வேண்டிய நாள்.

**மகரம்**
தனிப்பட்ட விஷயங்களை யாரையும் நம்பி பகிர வேண்டாம். நிதானப்போக்கு, தடைகள் இருந்தாலும் வெற்றி உண்டு. சக ஊழியர்களின் ஒத்துழைப்பு சற்றுக் குறைவாகவே கிட்டும்.

**கும்பம்**
பேச்சைக் குறைத்து செயலில் கவனம் கூட்ட வேண்டும். பொறுமை இழந்து யாரிடமும் கடுமையாகப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும்.

**மீனம்**
அன்பும் அரவணைப்பும் கிடைக்கும். போட்டிகளில் எதிர்பாராமல் வெற்றி பெற்று மகிழ்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களது வேலைகளைப் பகிர்ந்து உதவுவர்

தற்போதைய நிலைமையை தக்கவைத்தால்

# நவம்பர் 2ஆம் வாரமளவில் நாடு வழமைக்கு திரும்பும்!



## சன்ன ஜயசுமன கூறுகிறார்

**கொழும்பு, செப். 26**

**"நாட்டின் தற்போதைய நிலைமையை இன்னும் ஒரிரு வாரங்களுக்கு தக்கவைத்துக்கொண்டால், நவம்பர் 2ஆம் வாரமளவில் நாடு வழமைக்கு திரும்பக்கூடியதாக இருக்கும்."- என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன நேற்று தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

உலகில் ஒரு சில நாடுகளிலேயே மொத்த சனத்தொகையில் 50 வீதமானோருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளன. அந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது. ஆசிய நாடுகளின் வரிசையிலும் இலங்கை சிறந்த மட்டத்தில் உள்ளது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கும் அமுலில் உள்ளது. இதனால் சாதகமான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்நிலைமையை அடுத்துவரும் சில வாரங்களுக்கு தக்க வைத்துக் கொண்டால், எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் வாரமளவில் பாடசாலைகள், அலுவலகங்கள் உள்ளிட்டவற்றை திறந்து இயல்பு நிலைக்கு திருப்ப முடியும் - என்றார். (அ)

# ஒக்ரோபர் 15 வரை மாகாணத் தடை?

கொழும்பு, செப். 26

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதி கடும் கட்டுப்பாடுகள் சகிதம் தளர்த்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது என அறியமுடிகின்றது.

அதன்பின்னர் நாடு எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பில் பல தரப்புகளுடனும் சுகாதார அமைச்சு ஆலோசனைகளை பெற்றுவருவதாகவும் தெரியவருகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் முதலாம் திகதி தளர்த்தப்பட்டாலும், மாகாணங்களுக்கிடையிலான பொது போக்குவரத்தை ஒக்ரோபர் 15 ஆம் திகதியளவிலேயே ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், நிகழ்வுகளை நடத்துதல் உட்பட இதர விடயங்கள் தொடர்பிலும் 15 ஆம் திகதியளவிலேயே தீர்மானம் எட்டப்படவுள்ளது.

# லக்ஷ்மன் கிரியெல்லவுடன் மோதுகிறாரா கண்டி மேயர்?

கொழும்பு, செப். 26

கண்டி கெட்டம்பே பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசார அலுவலகத்தின் பெயர்ப் பலகை சேதமக்கப்பட்டுள்ளது.

கண்டி மாநகர மேயர் கேசர சேனாநாயக்கவின் உத்தரவில் நகர சபை அதிகாரிகளால் இந்த பெயர்ப் பலகை, விளம்பரம் என்பன அகற்றப்பட்டதாக ஐக்கிய மக்கள் சாந்தியின் கண்டி மாநகர சபை உறுப்பினர் விபுலலால் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த அலுவலகம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாவட்டத்தில் 806.4 மில்லிமீற்றர் மழை

வவுனியா, செப். 26

வவுனியாவில் இவ்வருடம் ஜனவரி முதல் நேற்று அதிகாலை 8 மணிவரையுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 806.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இடைக்கால பருவ மழை மாலை வேளைகளில் இன்னும் சில தினங்கள் நீடிக்கும். இடிமின்னல் தாக்கம் அதிகரிக்கும். எனவே பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட வளிமண்டல நிலையப் பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 18 ஆம் திகதியிலிருந்து நேற்று அதிகாலை 8 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் மட்டும் 117.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது . இடைக்கால பருவ மழை இன்னும் சில தினங்கள் நீடிக்க வாய்ப்புக்கள் உள்ளன.

அத்துடன் இடி மின்னல் அதிகரிக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றன பொதுமக்கள் பாதுகாப்புடன் நடந்து கொள்ளுமாறு மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போட அரசு ஆலோசனை!

கொழும்பு, செப். 26

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒன்னும் ஒரு வருடத்துக்கு பிற்போடுவது தொடர்பில் அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுவருவதாக அறியமுடிகிறது.

தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரக்காலம் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், குறித்த ஆட்சிக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு பிற்போடுவதற்கான அதிகாரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கு காணப்படுகிறது.

எனவே, இந்த அதிகாரத்தை பயன்படுத்தி அரசாங்கம் மேலும் ஒரு வருடத்துக்கு தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஆலோசித்துவருவதாக அறியமுடிகிறது.

தற்போதைய கொரோனா பரவல் காரணமாக இரண்டு வருடங்களாக பொதுமக்களுக்கு முறையான சேவைகளை செய்ய வாய்ப்புகள் அமையவில்லை எனவும், எனவே இதனைக் கருத்திற் கொண்டு தேர்தலை ஒத்திவைப்பதற்கான முடிவை எடுப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர் சுயநிர்ணய உரிமையின் அவசியத்தை வலியுறுத்துகின்றது தமிழ் எம்.பியின் கைது!

## பிரிட்டன் எம்.பி.சாம் டாரி தெரிவிப்பு

லண்டன், செப். 26

இலங்கையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தன்னிச்சையாக துன்புறுத்தப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதிக்கான பொறுப்புக்கூறல் மற்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அவசியத்தை அழுத்தமாக வலியுறுத்துகிறது என பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரும் நிழல் போக்குவரத்து அமைச்சருமான சாம் டாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட சவேந்திர சில்வா போன்ற போர்க் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானிய அரைசு தடைவிதிக்கவேண்டும். மேலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 30/1 தீர்மானத்தை நிறைவேற்ற இலங்கை உடன்படும்வரை அல்லது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்க உடன்படும் வரை இலங்கை மீது வர்த்தக கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் எனவும் சாம் டாரி கூறினார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடன் நான் என ஒற்றுமையை பகிர்ந்து கொள்கிறேன். தங்களுக்கு எதிராக புரியப்பட்ட அட்டூழியங்களுக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தியும், சுயநிர்ணய உரிமை கோரியும் தொடர்ச்சியாக இடம்பெறும் அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கிறேன் எனவும் பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினரும் நிழல் போக்குவரத்து அமைச்சருமான சாம் டாரி கூறியுள்ளார்.

# அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று அரசியல் கைதிகளை சந்தித்த சுமந்திரன்!

கொழும்பு, செப். 26

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் உட்பட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு சிறைச்சாலைக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கைதிகளின் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டதுடன் அவர்கள் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பிர் எம். ஏ. சுமந்திரன், சாணக்கியன், முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சயந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




# செப்ரெம்பரில் 24 நாள்களில் வடக்கில் 310 கொரோனா நோயாளிகள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு மாகாணத்தில் செப்ரெம்பர் மாதத்தில் நேற்று முன்தினம் 24ஆம் திகதிவரை 8 ஆயிரத்து 401 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 310 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதாரத்துறையின் நேற்றைய அறிக்கையின் படி, நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தில் 38 தொற்றாளர்களும் யாழ். மாவட்டத்தில் 30 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 28 தொற்றாளர்களும் மன்னாரில் 10 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 2 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் 5 பேரும் வவுனியா மாவட்டத்தில் 2 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

2020 மார்ச் தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை வடக்கு மாகாணத்தில் 35 ஆயிரத்து 571 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 719 பேர் கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அதிகப்படியாக யாழ். மாவட்டத்தில் 16 ஆயிரத்து 371 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 394 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 14 ஆயிரத்து 634 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். 228 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி நாடு திரும்பிய பின் நாட்டை திறப்பது குறித்து முடிவு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

**கொழும்பு, செப். 26**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய தன் பின்னர் நாட்டை முழுமையாக திறப்பது குறித்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவுள்ளதாக இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



மக்கள் மேலும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்றுமாறும் இராணுவத் தளபதி இதன்போது கேட்டுக் கொண்டார்.

அத்தோடு, புத்தாண்டு உள்ளிட்ட அனைத்து பண்டிகைகளையும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக கொண்டாடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அப்படி இல்லையெனில் மீண்டும் கொரோனா அலை நாட்டில் பரவுவதை யாராலும் தடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது நாட்டின் கொரோனா நிலைமை திருப்தி கொள்ளும் அளவிற்கு குறைந்து வருவதாக தெரிவித்த இராணுவத்தளபதி, எதிர்வரும் 3 மாதங்களில் மேலும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியுமென எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

நாடு மீள திறக்கப்படும் போது சுகாதார வழிகாட்டல்களை கடுமையாக பின்பற்ற வேண்டியது மக்களின் கடமையெனவும், தற்போது மக்கள் தொகையில் 50 சதவீதமானவர்களுக்கு இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்தாகவும் இராணுவத்தளபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.



# பஸ்ஸில் பயணித்த குடும்பம் அராலியில் விபத்தில் சிக்கியது

*யாழ்ப்பாணம், செப். 26*

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்கு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் இரவு இந்த சம்பவம் நடந்தது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

அராலி மத்தியில் வசிக்கும் நபர் ஒருவர் தனது குடும்பத்தினருடன் பஸ்ஸில் செல்லும்போது பஸ் அரச மரத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இதில் அறுவர் பயணித்த நிலையில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் மற்றைய இருவர் சாதாரண காயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்த மூவரும் 1990 இலக்க அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டனர்.

பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்கான காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (அ-03)

# இலங்கையில் மேலும் பல 'டெல்டா' உப பிறழ்வுகள் உருவாகும் அபாயம்!

*கொழும்பு, செப். 26*

நாட்டில் தற்போது பரவும் டெல்டா வைரஸின் உப பிறழ்வு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

எதிர்காலத்தில் மேலும் பல உப பிறழ்வுகள் உருவாகக்கூடும் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் வைரஸ் தொற்று தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நதீக ஜானக குறிப்பிட்டார்.

புதிய உப பிறழ்வு மற்றும் டெல்டா பிறழ்வின் செயற்பாடுகள் ஒரே விதமாக காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுதல் இன்றியமையாத செயற்பாடென கொழும்பு ஸ்ரீஜயவர்தனபுர



பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மருத்துவ ஆய்வு பிரிவின் பேராசிரியர் நீலிகா மாளவிகே தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றிக்கொண்டதன் பின்னரும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படக் கூடும், எனினும், தடுப்பூசி ஏற்றிக்கொண்டதன் பின்னர் நோய் எதிர்பு சக்தி அதிகரிக்கப்படுவதால், கொரோனா தொற்றின் பாரதூர நிலை ஏற்படாது எனவும் பேராசிரியர் நீலிகா மாளவிகே சுட்டிக் காட்டினார்.

# 6 வருடங்களின் முன் இறந்தவரின் பெயரில் திலீபனின் அஞ்சலிக்குத் தடைக் கட்டளை!

*முல்லைத்தீவு, செப். 26*

தியாகி திலீபனின் நினைவேந்தலை செய்யக்கூடாதென 6 வருடங்களின் முன்னர் காலமான ஒருவரின் பெயரில் பொலிஸார் நீதிமன்ற தடைக்கட்டளை விநியோகித்த சம்பவம் நேற்று முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதி அவைத்தலைவராக செயற்பட்டவர் அன்ரனி ஜெயநாதன். சுமார் 6 வருடங்களின் முன்னர் அவர் காலமாகி விட்டார்.

இந்த நிலையில், நேற்று அவரது வீட்டுக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், அன்ரனி ஜெகநாதன் என்பவரின் பெயரில் பெறப்பட்ட நீதிமன்றத் தடைக்கட்டளையை அவரது மகனான இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் பீற்றர் இளஞ்செழியனிடம் ஒப்படைத்தனர்.

தியாகி திலீபனின் நினைவஞ்சலியை அனுட்டிக்கக் கூடாதென அதில் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பீற்றர் இளஞ்செழியன் அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்யக்செய்யக்கூடாதென கட்டளை பெறவே முல்லைத்தீவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும், எங்கோ ஒரு இடத்தில் பெயர்க் குழப்பம் நேர்ந்திருக்கவேண்டும்.

இந்த நிலையில், நேற்று காலை பீற்றர் இளஞ்செழியனின் வீட்டுக்கு சென்ற பொலிஸார், நீதிமன்ற தடைக்கட்டளையை வழங்க முயன்ற போதும், பீற்றர் இளஞ்செழியன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

இன்று(நேற்று) காலை எனது வீட்டுக்கு வந்த பொலிஸார், நீதிமன்ற தடைக்கட்டளை ஒன்றை கொண்டு வந்தனர். அதில் அன்ரனி ஜெகநாதன் என குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படியொருவர் இங்கிருக்கவில்லையென கூறினேன். எனது தந்தையாரின் பெயர் அன்ரனி ஜெயநாதன். எனது பெயர் பீற்றர் இளஞ்செழியன். எனது தந்தையாரின் பெயரில் அந்த தடைக்கட்டளை பெறப்பட்டதென கூறினால், அவர் தற்போது உயிருடன் இல்லை. காலமாகி 6 வருடங்களாகிவிட்டது. அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தை காட்டுகிறேன். அங்கு போதிய இடமுள்ளது. இந்த தடைக்கட்டளையை நீங்கள் ஒட்டிவிடலாம் என்றேன். பொலிஸார் தடைக் கட்டளையுடன் சென்று விட்டனர்" என குறிப்பிட்டார்.

# இலங்கை மற்றும் இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர்கள் பேச்சு

*நியூயோர்க், செப். 26*

இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸூக்கும் இடையில் நியூயோர்க்கில் உள்ள இந்தோனேசிய தூதரகத்தில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை குறித்து இருதரப்பினரும் பேச்சு நடத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக இந்தியப் பெருங்கடலில் இடம்பெறும் குற்றங்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு மற்றும் தகவல் பரிமாற்றங்கள் குறித்தும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுற்றுலாத் துறையை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# தமிழர் மீது தொடரும் அடங்குமுறைகள் அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் கவலை!

*கான்பரா, செப். 26*

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை குறித்து கண்டனம் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையில் தொடரும் அடங்குமுறை தொடர்பில் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் கடுமையான ஆட்சேபனையை எழுப்புமாறு வலியுறுத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மாரிஸ் பெய்னுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நினைவேந்தல் நிகழ்வில் அஞ்சலி செலுத்த முயன்ற யாழ்.மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் இருவர் இலங்கை பொலிஸாரால் துன்றுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டமை கண்டு நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம்.

முறையான பிடியணை உத்தரவு இல்லாமல் தன்னிச்சையாக இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1987 ஆம் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த திலீபன்' நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தமிழர்களுக்கான நீதி மற்றும் சுதந்திரத்தை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த திலீபனின் நினைவிடத்தில் தமிழர்கள் தொடர்ந்து அஞ்சலி செத்துவது வழக்கமாகும்.

கொல்லப்பட்ட தமிழர்களை நினைவேந்தல் செய்ய முடியாதவாறு அடக்குமுறைகளை ஏவித் தடுக்கும் இலங்கை அரசின் போக்கு அதிகரித்து வருகிறது. இது குறித்த கவலைகள் புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளால் மீண்டும் மீண்டும் எழுப்பப்படுகிறது.

2021 செப்ரெம்பர் 48 ஆவது அமர்வில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பித்த வாயமொழி அறிக்கையில் இலங்கையில் அமைதியான போராட்டங்கள் மற்றும் நினைவுகூரல்கள் வலுவான சக்தியைப் பயன்படுத்தி ஒடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்கும் வகையில் அவர்கள் தனிமைப்படுத்தல் மையங்களில் தடுத்துவைக்கப்படுவது குறித்து அவர் கரிசனை வெளியிட்டார்.

இந்நிலையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் நினைவேந்தல் செய்தமைக்காக கைது செய்யப்பட்டமை தமிழ் மக்கள் மீதான இராணுவ அச்சுறுத்தலையும் அமைதியான நினைவேந்தலை தொடர்ந்து தடுத்து நிறுத்தும் அடாவடியையும் பிரதிபலிக்கிறது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினரின் தன்னிச்சையான கைது இலங்கையில் சாதாரண தமிழ் மக்கள் தங்கள் சொந்த நாட்டில் இராணுவ ஆட்சியின் கீழ் வாழுவதால் ஏற்படுத் நெருக்கடியை வெளிப்படுத்துகிறது.

இந்நிலையில் இந்த விடயம் குறித்த அவுஸ்திரேலிய அரசின் கசிசனையை இலங்கையிடம் வெளிப்படுத்துமாறு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்- என்றுள்ளது.




# உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளவும் தீர்வு காணவும் இந்திய - அமெரிக்க நட்பு பேருதவியாகும்



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்



இன்று, ஞாயிற்றுக்கிழமை உங்களுக்குப் பிடித்த 'ஈழநாடு' பத்திரிக்கையை நீங்கள் படிக்கத் தொடங்கும்போது, பிரதமர் மோடி புதன்கிழமை தொடங்கிய மூன்று நாள் அமெரிக்க சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, ஓய்வு எடுத்துக்கொண்டிருப்பார்.

நிரம்பி வழிந்த அவரது நிகழ்ச்சி நிரலில் நான்கு முக்கிய அம்சங்கள் இருந்தன - அதிபர் ஜோ பைடனுடனான முதல் நேரடி சந்திப்பு, இந்தோ பசிபிக் பகுதியை இலகுவானதாகவும் முன்னேற்றத்துக்குத் தயாரானதாகவும் மாற்ற முனைகிற அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் 'க்வாட்' கூட்டமைப்பின் முதல் நேரடி சந்திப்பு, முதலீடுகளை அதிகப்படுத்துவதற்காக அமெரிக்காவின் முக்கிய பெருநிறுவனங்களின் தலைவர்களுடன் சந்திப்பு, 76ஆவது ஐ. நா பொதுச் சபையில் உரையாற்றுவது. இதில் ஐந்தாவதான, முக்கியமான ஒரு அம்சமும் இருந்தது - அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ/டனான சந்திப்பு. எதிர்காலத்தில் பாகிஸ்தானால் வரும் தீவிரவாத அச்சுறுத்தல், மனித வளங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்துகொள்வது, கோவிட்டுக்கு எதிரான போர் என்று பல தளங்களில் அமெரிக்க-இந்திய உறவு வலுவானதாக இருப்பதற்கு அவர் தயார் செய்துகொண்டிருந்தார்.

சந்திப்புக்குப் பின்னரான மோடி மற்றும் பைடனின் அறிக்கைகளைப் பார்த்தால், எல்லாம் நல்லபடியாக முடிந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். "நம்முடைய சந்திப்பு மிக முக்கியமானது. இந்த நூற்றாண்டின்

## உலகளாவிய சக்திகளின் விளையாட்டில் இலங்கைக்கும் தாக்கங்கள் இருக்கும்

மூன்றாவது தசாப்தம் தொடங்கும்போது சந்திக்கிறோம். உங்களது தலைமை இந்த தசாப்தம் எப்படி இருக்கப் போகிறது என்பதை நிர்ணயிக்கும். இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான வலுவான நட்புக்கு விதை போடப்பட்டிருக்கிறது" என்று மோடி பைடனிடம் கூறினார். கோவிட்டுக்கும் காலநிலை மாற்றத்துக்கும் எதிரான போரில் அவரது ஆளுமைத் திறனையும் பாராட்டினார். இந்திய - அமெரிக்க உறவின் முக்கிய சிகரங்களாக ஐந்து அம்சங்களையும் முன்வைத்தார் - மரபு, திறன், தொழில் நுட்பம், வணிகம் மற்றும் நம்பகத்தன்மை.

2006இல், தான் துணை அதிபராக இருந்தபோது 2020க்குள் இந்தியாவும் அமெரிக்காவும் உலகிலேயே நெருக்கமான நட்பு கொண்ட நாடுகளாக இருக்கும் என்று கணித்ததைக பைடன் குறிப்பிட்டார். பல உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளவும் தீர்வு காணவும் இந்த நட்பு உதவியாக இருக்கும் என்று தான் நம்புவதாகவும் கூறினார்.

கமலா ஹாரிஸுடனான சந்திப்பை ஒரு ராஜதந்திரத்துடன் மோடி திட்டமிட்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். ஓர் அமெரிக்க அதிபருக்கு உண்டான துல்லியமான அறிவுத்திறனும் சுறுசுறுப்பும் போதுமான அளவுக்கு பைடனிடம் இல்லை என்பதை உணர்ந்த அவர், அமெரிக்க அரசிற்குள்ளிருந்து இந்தியாவுக்கு நட்புக்கரம் நீட்ட கமலா ஹாரிஸ் சரியானவராக பல ஆண்டுகள் இருப்பார் என்று நினைத்திருக்கிறார். கமலா ஹாரிஸின் பூர்வீகம் தமிழ்நாடு என்பதும் முக்கியமானது. அவரது தாத்தா-பாட்டிகள் திருவாரூர்/தஞ்சாவூருக்கு அருகில் இருக்கிற மன்னார்குடியில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள். பெர்க்லியில் உள்ள கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தில் ஊட்டச்சத்து மற்றும் நாளமில்லா சுரப்பியியலில் முதுகலைப்பட்டம் பெறுவதற்காக கமலாவின் தாயார் ஷியாமளா தனது 19ஆம் வயதில் அமெரிக்காவுக்கு வந்தார். 2009இல் தனது தாயாரின் அஸ்தியை இந்தியப் பெருங்கடலில் கரைப்பதற்காகக் கமலா தமிழ்நாட்டுக்கு வருகை தந்திருக்கிறார்.

இந்திய அரசின் அதிகாரியாக கமலாவின் தாத்தா கோபாலன் ஆற்றிய பணிகள் பற்றிய ஒரு ஆவணத்தை மோடி கமலாவுக்குப் பரிசளித்தார். எல்லை கடந்த பயங்கரவாதத்துக்குப் பாகிஸ்தானின் பங்களிப்பு பற்றிப் பேசிய கமலா ஹாரிஸ், இந்தியா மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் தீவிரவாதத்துக்கு ஆதரவு தரவேண்டாம் என்று பாகிஸ்தானைக் கேட்டுக் கொண்டார். ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை உறுதி செய்யும் அரசியலமைப்புச் சட்டம் 370 பிரிவை ரத்து செய்ததற்காகவும் அடக்குமுறை அரசுகளிடமிருந்து தப்பிக்கும் இந்து அகதிகளுக்குக் குடியுரிமையை வழங்குவதை விரைவுபடுத்தும் குடியுரிமைச் சட்டத்தை அமல்படுத்தியதற்காகவும் கமலா கண்டனம் தெரிவித்திருந்தார் என்பதால், பாகிஸ்தானைப் பற்றிய கமலா ஹாரிஸின் இப்போதைய பேச்சும் மோடிக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கக் கூடும்,

அடுத்த நாள் ஐ. நாவில் இணைய வழியில் உரையாற்றிய பாகிஸ்தான் அதிபர் இம்ரான் கான், பாகிஸ்தானை

## தீயணைப்பு வீரராக வேடமிடும் தீவிரவாதி இம்ரான் கான்

யும் ஆப்கானிஸ்தானையும் கைவிட்டதற்காக அமெரிக்காவைக் குற்றம் சாட்டினார். பிறகு ஜம்மு காஷ்மீர் விவகாரத்தைக் கையிலெடுத்த அவர், இந்தப் பிரச்னை ஒழுங்காகத் தீர்க்கப்பட்டால் மட்டுமே தெற்காசியாவில் அமைதி நீடிக்கும் என்றார். பிரிவு 370ஐ ரத்து செய்து இந்தியா 2019இல் வெளியிட்ட அறிவிப்பையும், பாகிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதத் தலைவர் சையது அலி ஷா ஜீலானியின் மறைவையும் குறிப்பிட்டு, "இந்தியாவில் மிக மோசமான இஸ்லாமிய வெறுப்பு நிலவுகிறது" என்றார்.

இந்தியாவின் பிரதிநிதியான இளைய அதிகாரி ஸ்னேகா துபே, அதிபர் இம்ரான் கானின் உரையை சுக்கு நூறாக உடைத்தார். தன் சொந்த நாட்டில் இருக்கும் பிரச்னையையும், தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தருவது, பயிற்சி தருவது, ஆயுதங்கள் வழங்குவது ஆகியவற்றின்மூலம் உலக அமைதிக்கு பாதகமாக இருப்பதையும் மறைக்கவே இந்த பொய்க்குற்றச்சாட்டை இம்ரான் கான் வைக்கிறார் என்று கூறினார். "தீயணைப்பு வீரராக வேடமிட்டிருக்கும் தீவிரவாதி" என்று பாகிஸ்தானை வர்ணித்த துபே, ஐ.நா சபைக்கும் உலக மக்களுக்கும் 9/11 குற்றவாளி ஒஸாமா பின் லாடனுக்குப் பாகிஸ் தான் அடைக்கலம் வழங்கியதை நினைவுபடுத்தினார். தீவிரவாதிகள் பாகிஸ்தானில் சுதந்திரமாக உலவலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் மோடியின் அமெரிக்க பயணமும் பைடன் மற்றும் கமலா ஹாரிஸுடனான அவரது சந்திப்பும் இந்திய பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக அலங்கரித்தபோதும், அமெரிக்காவில் க்வாட் சந்திப்பே பெரிதாகப் பேசப்பட்டது. அமெரிக்கர்களுக்கும் உலக மக்களுக்கும் சீனாவின் பரவலுக்கு எதிரான க்வாட்டின் செயல்பாடுகள் முக்கியமானவை.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பானிய பிரதமர் யோஷிஹிடே சுகா, அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மாரிஸன் ஆகிய க்வாட் தலைவர்களுடனான, வெள்ளிக்கிழமை நடந்த க்வாட் சந்திப்பு நன்றாகவே முடிந்தது என்று தெரிவிக்கிறார்கள். இந்தோ பசிபிக் பகுதியில் அமைதியை நிலைநாட்ட, இன்னும் க்வாட் அமைப்புக்குக்கீழ் பல நாடுகளைக் கொண்டுவரவேண்டும் என்றும் கூறுகிறார்கள். வாஷிங்டனிலிருந்து வந்த தகவல்கள், க்வாட்டின் முக்கிய இலக்கு சீனாதான் என்று சுட்டிக்காட்டுகின்றன. "க்வாட் என்பது வெறும் ஓர் ஊடக பரபரப்பு, இந்தக் குழுவுக்கு எந்த ஆதரவும் கிடைக்காது" என்று சீனா முன்பே புறந்தள்ளிவிட்டது. தாங்கள் மட்டுமே உலக அமைதியையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்த முடியும் என்று சீனா சொல்கிறது. ஆனால், வளங்கள் நிரம்பிய 1.3 மில்லியன் சதுர மைல்கல் கொண்ட தெற்கு சீனக்கடலை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. செயற்கைத் தீவுகளி லும் கப்பற்படைத் தளங்கள் அமைத்து மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், தாய்வான், புரூணை உள்ளிட்ட நாடுகளை அச்சுறுத்தி வருகிறது.

போர் நோக்கத்தோடும் ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணங்களோடும் இந்தோ பசிபிக் பகுதி மட்டுமல்லாமல் ஆசியா, ஐரோப்பாவிலும் செயல்பட்டுவரும் சீனாவிற்கு எதிராக க்வாட் வேகமாக மேலெழுந்துவிட்டதாக வெளிநாட்டுக் கொள்கையாளர்களும் முன்னாள் ராஜதந்திரிகளும் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு சவால்விடும் வகையில் இருக்கும் சீனாவின் எழுச்சி, மீண்டும் ஒரு பனிப்போரை உருவாக்கியுள்ளது. முன்பு சோவியத் யூனியன் இருந்த இடத்தில் இப்போது சீனா இருக்கிறது. ரஷ்யா, பாகிஸ்தான், இலங்கை, சில ஆபிரிக்க நாடுகளோடு



சீனா கைகோத்துள்ளது. சில ஐரோப்பிய நாடுகள், சீன முதலீடுகளை நம்பியிருக்கும் சில ஆசிய நாடுகளையும் உள்ளிழுக்கும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த உலகளாவிய சக்திகளின் விளையாட்டில் இலங்கைக்கும் சில தாக்கங்கள் இருக்கும். இந்த சிறு தீவில் சீனா பெரிய அளவில் முதலீடு செய்துள்ளது. இலங்கை மீதான தன் பிடியை இறுக்குவதற்காக சீனா இன்னும் முதலீடு செய்தபடியே இருக்கும். தொழிற்சாலைகள், சாலைகள், பாலங்கள், துறைமுக நகரங்கள், காற்றாலைகளையும் தாண்டி இது நீளும். ஏற்கனவே இலங்கையின் துறைமுகங்களில் சீனக் கப்பல்களும் நீர்மூழ்கிகளும் வந்து இறங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவும் க்வாட் உறுப்பினர்களும் தங்கள் எதிர்ப்பு யுக்திகளை திட்டமிடவேண்டும். நம்மைப் போன்ற சிறியவர்கள் இந்த தாக்குதலுக்கு இடையில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பது எப்படி என்று திட்டமிடவேண்டும். உலகளாவிய தமிழ்க் கூட்டமைப்பு உருவாக ஏற்படும் தாமதத்தைக் குறைத்து, ஈழத்தமிழர்களுக்கான பொதுத்தலைமையை உருவாக்கவேண்டும். இரா. சம்பந்தனின் சுமையைக் குறைக்கவேண்டும். அவர் களத்தில் இறங்கிப் போரிடும் வீரராக நீடிக்காமல், ஒரு வழிகாட்டியாக மட்டும் இருப்பததே நலம்.

உலகளாவிய தமிழர்களின் கூட்டமைப்பு வந்தால், வரப்போகிற பனிப்போரில் ஈழத்தமிழர்கள் ஒரு முக்கிய ஆதரவு அமைப்பாகக் கருதப்படுவார்கள். அது கானல் நீராக இருப்பதால்தான் நாம் 'சிறியவர்களாகவும்' பெரிய ஆட்டக்காரர்களின் பகடைக்காரர்களாகவும் சுருங்கி விட்டோம். இது தொடரவேண்டுமா? ●



> நடக்கின்ற விசரனைகளில் இதன் பின்னர் இப்படி சம்பவங்கள் நிகழாது இருக்க என்ன பண்ண வேண்டும் என்ற சிபார்சுக் கடதாசியாகத் தான் அது அமைந்திருக் கும். இதற்கு முன்னரும் மாஹரகம, வெலிக்கடை சம்பவங்களுக்காகப் போடப்பட்ட விசாரணைக் குழுக்களுக்கு என்ன நடந்தது?

# லோஹான் விவகாரத்தை மூடி மறைக்கும் முயற்சி?

**நஜீப் பின் கபூர்**

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் குற்றங்களுக்காக சிறைகளில் தண்டனைகளை அனுப விக்கின்ற தமது சாகக்களை, உறவுக் காரர்களை சிறைகளில் இருந்து மீட்டெ டுப்பதற்காக விஷேட விதிகளை உபயோ கித்து தமக்குத் தேவையான ஆட்களை விடுவித்துக் கொண்டது. இதற்கும் மேல திகமாக தமது தரப்பிலுள்ளவர்கள் செய் திருக்கும் மோசடிகள் குற்றங்கள் என்ப வற்றிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றி விடவும் பல சட்டத் திருத்தங்களைச் செய்து கொண்டதும் உலகறிந்த செய்தி.

இதற்கு சர்வதேச மட்டத்தில் இருந் தும் கண்டனங்கள் வந்தன. இப்படி விடுதலை பெற்ற ஒருவர்தான் துமிந்த சில்வா. அவருக்கு அரசு உயர் பதவிக ளையும் கொடுத்துக் கௌரவித்ததும் எல்லோருக்கும் தெரிந்த விவகாரம். உடத்தலவின்னை கூட்டுப் படுகொலை யுடன் தொடர்பு பட்டு சிறையில் இருந்த அனைவரையும் அன்று ஜனா திபதியாக இருந்த மஹிந்த விடுவித்திருந்தார்.

தமக்குத் தெரிந்தவர்கள் உறவுக்காரர்கள் தப்பு செய் தால் அவர்களை விஷேட சலுகைகளை வழங்கி அதிலிருந்தும் விடுவித்துக் கொள்ளும் ஒரு விதி முறை நமது நாட்டில் நெடுநாளாக இருந்து வருகின்றது. இப்படித் தான் ஒரு காலத்தில் பெரும் குற்றவாளிகள் பட்டியலில் இருந்த சொத்தி உபாலி கோணவல சுனில் போன்றவர் களை நமது முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா சலுகைகளை வழங்கிப் பாது காத்துக் கொண்டிருந்தார் என்று நாட்டில் பரவலாக கதைகள் இருந்ததும் நாம் அறிந்ததுதான்.

எனவே இந்த நாட்டில் அரசியல் தலைவர்களுக்கு நெருக்கமாக இருந்து கொண்டு என்ன அட்டகாசங்களை வேண்டுமானால் பண்ணிக் கொண்டி ருக்க முடியும். அப்படி சிக்கிக் கொண் டாலும் தமது ஆதரவுத் தலைவர்கள் பாதவிக்கு வரும் போது அவர்களுக்கு விடுதலையும் கொடுத்து சலுகைகள், உயர் பதவிகள் என்று கொடுத்து அலங்கரிக்கும் ஒரு கலாச்சாரம் இன்றும் இந்த நாட்டில் செய்கின்றது.

இப்போது நேரடியாக தலைப்புக்கு வருவோம். சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலைக்குப் பொறுப்பாக இருந்த இராஜாங்க அமைச்சர் லோஹான் ரத்வத்தே அனுராதபுர சிறைச்சாலைக்குப் போய் சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளை வெளியே எடுத்து அவர்களது தலையில் துப்பாக்கியை வைத்து குற்றங்களை ஒப்புக் கொள்ளுங் கள் என்று கூறி கொலைப் பயமுறுத்தல் செய்திருந்தார் என்பது தற்போது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டு மல்ல ஆளும் தரப்பு அமைச்சர்கள் கூட இராஜாங்க அமைச்சர் லோஹான் தவறை உணர்ந்து பதவியை இராஜி நாமாச் செய்து அரசியல் நாகரிக மொன்றை நிலை நாட்டி இருக்கின்றார் என்று புகழந்திருந்தனர். துறைக்குப் பொறுப்பான நீதி அமைச்சர் அலி சப்ரி சம்பவத்துக்கு நாம் வருத்தம் தெரிவிப் பதாக பகிரங்கமாக சொல்லி இருந்தார். எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு போய் பாதிக்கப்பட்ட சிறைக் கைதிகளுடன் கலந்து பேசிய போது ஊடகங்களில் சொல்லப்பட்ட அணைத் தும் உண்மையான கதைகள் என்று தெரியவந்தது. ஆனால் சம்பந்தப்பட்ட இரமஜாங்க அமைச்சர் லோஹான் அப்படி ஒரு நிகழ்வே நடக்கவில்லை என்று ஊடகச் சந்திப்பில் கூறி இருந்தார்.

பொலிஸ் அமைச்சர் சரத் வீரசேக்கர லோஹான் பாவித்தது சட்டரீதியான துப்பாக்கி என்று அதற்கு நியாயம் கூறி இருந்தார். இந்த செய்திகளைப் படிக் கின்ற நீங்கள் இப்போது ஒரு தீர்மானத் துக்கு வந்திருப்பீர்கள். இதற்கு மேலாக குறிப்பிட சம்பவம் தொடர்பில் சிறைக் கைதிகள் நலன் பேனும் அமைப்பு அமைச் சரைக் கைது செய்யும்படி முறைப் பாடும் கொடுத்திருக்கின்றது. ஆனால் இன்று வரை அமைச்சர் பதவியுடன் சுதந்திரமாக உலாவி வருகின்றார்.



இதற்கு முன்பும் பல தடவைகள் இதே ஆள் துப்பாக்கிகளை கையில் எடுத்துக் கொண்டு தன்னிச்சையாக செயற்பட்டு வந்திருக்கின்றார் என்பது பிரதேச மக்கள் மட்டுமல்ல நாடே அறிந்த கதை. இப்போது அவரை சம்பவத்தில் இருந்து காப்பாற்றிவிடு கின்ற முயற்சிகள்தான் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றது என்று சிறைக் கைதிகள் நலன் பேனும் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக்கப் பெரேரா தெரிவிக்கின்றார்.

இதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரனைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக நீதி அமைச் சர் அலி சப்ரி கூறி இருக்கின்றார். எம் மைப் பொறுத்தவரை இது நீதி அமைச் சரின் ஏற்பாடு கிடையாது. மேலிடத்தில் இருந்து வந்திருக்கின்ற ஒரு பணிப்புரை யைத்தான் அமைச்சர் இது விவகாரத்தில் முன்னெடுக்க முனைகின்றார் என்று நாம் நம்புகின்றோம். ஒரு சராசரி மனிதன் ஒருவருக்கு எவராவது தலையில் தூப்பாக் கியை வைத்து அச்சுறுத்தி இருப்தாக ஒருவர் பொலிசில் முறைப்பாடு செய் திருந்தால் என்ன நடக்கும்? அது பற்றிய விசாரனைகள் உடனே நடக்கும்.

இன்று உலகே அறிந்து வைத்திருக் கின்ற இந்த சம்பவத்தில் அரசாங்கம் எப்படிச் செயலாற்றி இருக்க வேண்டும் என்பது சிறு பிள்ளைக்கும் புரியும். ஆனால் ஒய்வு பெற்ற ஒரு நீதிபதி செய்கின்ற விசாரணைகள் எப்படி அமையும் என்பதற்கு இந்த நாட்டில் நிறையவே உதாரணங்கள் இருக்கின் றன. அந்த விசாரணையின் முடிவுகள் வரும் போது இந்த அரசாங்கம் பதவியில் இருக்குமா என்பது சந்தேகம்.

பெரும்பாலும் அப்படி நடக்கின்ற விசரனைகளில் இதன் பின்னர் இப்படி சம்பவங்கள் நிகழாது இருக்க என்ன பண்ண வேண்டும் என்ற சிபார்சுக் கடதாசியாகத்தான் அது அமைந்திருக் கும். இதற்கு முன்னரும் மாஹரகம, வெலிக்கடை சம்பவங்களுக்காகப் போடப்பட்ட விசாரணைக் குழுக் களுக்கு என்ன நடந்தது? அரசு நிய மனம் செய்கின்ற சில ஆணைக் குழுக் களின் முடிவுகள் வெளிவராமலே நிய மிக்கப்பட்ட உறுப்பினர் இயற்கை ஏய்தும் நிலையும் வந்து விடும். எனவே இது முற்றிலும் குற்றவாளியை காப் பாற்ற மேடை யேற்றப்படுகின்ற ஒரு நாடகம் என்பதுதான் என்று சிறைக் கைதிகள் நலன் பேனும் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக்கப் பெரேரா கருதுகின்றார்.

பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்



# அரசாங்கத்தின் இராஜதந்திர செயன்முறை ஐ. நாவின் நகர்வுகளை முறியடித்துள்ளதா?

இலங்கையின் தேசிய இனப்பிரச்னைக்கு சர்வதேச பங்களிப்புடனான வெளியகப் பொறிமுறையூடாகவே வினைத்திறனான தீர்வைப் பெறமுடியும் என்பதே இலங்கை தமிழர் தரப்பின் நீண்டகால நம்பிக்கையாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. எனினும், இலங்கையின் எந்தவோர் அரசாங்கமும் சர்வதேச பங்களிப்புடனான வெளியகப் பொறிமுறையை ஏற்கத் தயாராக இல்லை. எனினும், ஒப்பீட்டளவில் ரணில் - மைத்திரி தேசிய அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு நிலைமாறுகால நீதியை செயல்படுத்த தயாராக இருப்பதாக சர்வதேசத்துக்கு செய்தி வழங்கியது. சிறீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் உள்ளக பொறிமுறையூடாகவே எதனையும் நகர்த்த முடியுமென தொடர்ச்சியாக ஜெனிவா தீர்மானங்களையும் நிராகரித்து வருகின்றனர். எனினும், இந்த அரசாங்கத்தால் தமிழ்மக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய வகையில் உள்ளக பொறிமுறையை செயல்படுத்த முடியுமா என்பது தேடலுக்குரிய பகுதியாகும். இதனை மையப்படுத்தியே இந்தக் கட்டுரையும் அரசாங்கத்தின் உள்ளக பொறிமுறையின் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்வதாக அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர்-13அன்று ஆரம்பிக்கப்பட்ட 48ஆவது ஜெனிவா கூட்டத் தொடரில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் தனது வாய்மூல அறிக்கையில் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்களை சுட்டிக்காட்டினார். அத் துடன், 46ஆவது ஜெனிவா கூட்டத் தொடரில் முன்மொழியப்பட்ட இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களை ஆவணப்படுத்து வதற்கான செயல்பாட்டிற்கு நிதியிடல் தொடர்பாகவும் குறிப்பிட்டார். இதனை நிராகரித்த இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தின் ஊடாக நிறுவப்படக் கூடிய எந்தவொரு வெளியகப்பொறிமுறை தொடர்பான முன்மொழிவுகளையும் முழுமையாக நிராகரிப்பதாகவும், அவற்றுக்கு பதிலாக உள்ளகப் பொறிமுறையின் ஊடாக அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பின்றி ஏற்படுத்தக்கூடிய வெளியகப் பொறிமுறைகளால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என்பதுடன், அது அரசியல் மயப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தார். அவ்வாறே கடந்த செப்ரெம்பர்-20அன்று நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது, நாட்டின் உள்ளக பிரச்னைகள் தொடர்பில் உள்நாட்டிலேயே பேசி தீர்வைப் பெறவேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்தின் சகல தரப்புகளும் உள்ளக பொறிமுறையையே வலியுறுத்தி வருகின்றன.

உள்ளக பொறிமுறையை தமது தாரக மந்திரமாக கொண்டுள்ள தற்போதைய அரசாங்கமானது, நிலைத்த சமாதானத்துக்கும் வினைத்திறனான தீர்வுக்கும் உரித்தான நம்பகத்தன்மையை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உறுதிப்படுத்துகிறார்களா என்பதை நுணுக்கமாக அவதானிக்க வேண்டியுள்ளது.

முதலாவது, ஜனாதிபதி ஐ.நா பொதுச் செயலாளருடனான உரையாடலில், தீவிரவாத செயல்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பெரும்பாலான இளைஞர்கள் தாம் ஆட்சியை பொறுப்பேற்றதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனவும், நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க தயங்க மாட்டேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் இத்தகைய உத்தரவாதங்கள் போலித்தன்மையானவை என்பதை 2010ஆம் ஆண்டிலிலிருந்து அவதானிக்க முடிகிறது. தமிழ் அரசியல் கைதிகள், காணாமல் போனோர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், மற்றும் போர் இறுதிக்காலப்பகுதியில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்களென பெருந்தொகையான தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 12 ஆண்டுகளில் எத்தகைய பெருமளவிலான விடுதலை யையும் பெறவில்லை. ஐ. நா. சபையின் அனைத்து தீர்மானங்களையும் ஏதொவொரு வகையில் ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் கையாண்டனவேயன்றி தெளிவானதோர்அரசியல் பொறி முறையை மேற்கொள்ளவில்லை. இதன் நீட்சியாகவே ஜனாதிபதி ஐ. நா. பொதுச் செயலாளர் சந்திப்பும் உரையாடல்களும் அமைய இருக்கிறது.

இரண்டாவது, காணாமல் போன நபர்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை வெகுவிரைவில் முன்னெடுப்பதாகவும் மற்றும் மரண சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் துரித நடவடிக்கைகள் எடுப்பதாகவும் ஜனாதிபதி பொதுச்செயலாளரிடம் தெரிவித்தார். எனினும், இலங்கையில் காணமல் ஆக்கப்பட்டோர் பலரும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணமல் ஆக்கப்பட்டுள்ளனர். மேலும், குறித்த காலப்பகுதியில் இன் றைய அரசாங்கமே ஆட்சியிலும் இருந் தது. போரில் நேரடியாக பங்குபற்றிய பலரும் இன்றும் ஆட்சியின் பிரதானிகளாக உள்ளனர். எனவே பொறுப்புக்கூறல் என்பது இன்றைய அரசாங்கத்திடம் உயரளவில் காணப்படுகின்றது. இந்நிலையில் மரணச்சான்றிதழ் அளிப்பதாயின் அதற்கான நீதியும் வழங்கப்படுதல் அவசியமானதாகும். எனினும், அண்மையில் இடம்பெற்ற சர்வதேச காணாமல் போனோர் தினத்தில் இடம்பெற்ற இணையவழி கலந்துரையாடலொன்றில், இலங்கையில் காணமல் ஆக்கப்பட்டோர் காணமல் போனமை எப்படி என்பது தொடர்பில் ஆராய வேண்டாம் என ஜனாதிபதி தெரிவித்தாரென இலங்கையின் நீதியமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான உரையாடல்களை மேற்கொள்பவர்களிடம் எத்தகைய தீர்வை பெறமுடியுமென்பது சவாலான விடயமாகும்.

மூன்றாவது, உள்ளகப் பொறிமுறையில் சமாதானமாக பேசி இலங்கை தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வுகாண புலம்பெயர் தமிழர்களை பேச்சுக்கு அழைப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். எனினும், கடந்த மார்ச் (2021) மாதம் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புக்களில் பலரின் விபரங்களை தடைப்பட்டியலில் அறிவித்துள்ளனர். தடைப்பட்டியலில் அறிவிக்கப்பட்டோரை எவ்வகையில் பேச்சுக்களுக்கு ஜனாதிபதி அழைக்க முடியுமென்பது முரண்நகையான செயல்பாடாக அமைகிறது. இது புலம்பெயர்ந்த அமைப்புக்களையும் அவர்களின் இலங்கை தமிழர் விவகாரங்களின் தலையீடுகளையும் கையாள்வதற்கான உத்தியாகவே தெரிகின்றது. அதாவது இலங்கை அரசாங்கத்தின் பொருத்தமான கருத்துக்களை கொண்ட புலம்பெயர் அமைப்புக்களுடன் உரையாடுவதன் மூலம் இனப்பிரச்னைக்கான தீர்வை தற்போதைய அரசாங்கம் விரும்புகின்ற பாணியில் தீர்ப்பதற்கான முனைப்பாகவே அமைய வாய்ப்புள்ளது.

நான்காவது, தற்போதைய அரசாங்கத்தின் உறுப்பினர்களின் செயல்பாடுகள் தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தின்மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு மாறாக நம்பிக்கையீனத்தையே அதிகரிக்கிறது. குறிப்பாக அண்மையில் அநுராதபுர சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிக்கு எதிராக நிகழ்ந்த செயல்பாடு அமைகிறது. அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் கைத்துப்பாக்கியுடன் உட்புகுந்து சிறைச்சாலைகள் முகாமைத்துவ மற்றும் சிறைக்கைதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தியுள்ளார். இச்செயல் பூதாகரமானதையடுத்து பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் தலையீட்டில் சிறைச்சாலையுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சை மாத்திரம் அவர் இராஜினாமா செய்திருந்தார். துப்பாக்கி மூலம் உயிர் அச்சுறுத்தல் விடப்பட்ட இராஜங்க அமைச்சருக்கான உயர் தண்டனை இலங்கை அரசாங்கத்தின் நீதியில் இராஜினமாவாகவே காணப்படுகின்றது. இதனை ஐ. நா சபை வரை கொண்டு சென்று பொறுப்புக்கூறலாக காட்ட முயற்சிக்கும் நடவடிக்கையாகவும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

ஐந்தாவது, இலங்கை அரசாங்கம், இனப்பிரச்னை தீர்வு, அரசியல அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வுகள் தொடர்பான உரையாடல்களில் அதிகமாக “விரைவாக“ செயல்படுத்தப்படுமென்ற கருத்தையே குறிப்பிட்டு வருகின்றனர். ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு 12 ஆண்டுகளை கடந்துள்ளது. இந்நிலையில் விரைவாக என்பதன் காலப்பகுதி மயக்க நிலையிலுள்ளது. இது சர்வதேச நாடுகளையும், அதன் நிறுவனங்களையும் கையாள்வதற்கான சொல்லாட்சியாகவே காணப்படுகின்றது. 1957ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை காலத்தை நீடிப்பதற்கான இராஜதந்திர சொல்லாடல்களை முன்னிறுத்தி தென்னிலங்கை அரசாங் கங்கள் செயல்பட்டிருந்தமையை அவதானிக்க முடிகிறது. ஆரம்பத்தில் உள்நாட்டில் முரண்பாடுடைய இரு தரப்புகளுக்கு இடையில் உடன்பாடுகளை ஏற்படுத்தி முரண்பாடான தீர்வை வெளிப்படுத்தியது போன்று பிராந்திய மட்டத்திலும் தற்போது சர்வதேச மட்டத்திலும் அத்தகைய இராஜதந்திர சொல்லாடல்களை முன்வைத்து பிரச்னைக்குரிய தீர்வை சாத்தியமற்றதாக்கி வருகின்றனர். ஜெனிவாவிலும் நியூயோர்க்கிலும் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர நகர்வுகளை நடைமுறைக்கு ஒவ்வாது என்பது கடந்தகால வரலாற்றின் நீட்சியாகவே விளங்குகின்றது.

எனவே, தற்போதைய அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறையின் வினைத்திறனும் இவ்வாறான மாயைகளையே அதிகம் காட்சிப்படுத்தக்கூடியதாகும். இது உள்ளகப் பொறிமுறையூடாக முழுமையாக பிரச்னையை மூடி மறைப்பதற்கான வழிவகையையே ஏற்படுத்தும். சர்வதேசம் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்களை எச்சரிக்கை தொனியின்றி சுட்டிக்காட்டும் சூழலில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மாயைகளை பின்னி உள்ளகப் பொறிமுறையை நியாயப்படுத்துகையில் சர்வதேசம் எவ்வித எச்சரிக்கைகளும் நெருக்கடிகளுமின்றி கடந்து செல்வது சர்வதேச நியாயப் பொறிமுறையின் போலித்தனங்களை வெளிப்படுத்துகின்றது. சர்வதேச சக்திகள் நியாயப் பொறிமுறைகளை அதிகம் தமது அரசியல் நலன்களுக்கு ஊடாகவே நோக்குகின்றன. தமது நலனுக்கு அச்சுறுத்தலான காலப்பகுதியில் நியாயப் பொறிமுறை பிரசாரமூடாக நெருக்கடிகளையும் தமது நலன்கள் பூர்த்தி செய்யப்படும் சூழலில் ஒரு தளர்வையும் ஏற்படுத்த முனைகின்றனர். இலங்கை - சீனா நெருக்கம் அதிகரிக்கையில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் சர்வதேச நிறுவனத்தினூடாக இலங்கை தமிழர் நலனை முன்னிறுத்தி நெருக்கீடுகளை முன்வைத்த போதிலும், இலங்கை அமெரிக்க தலைமையிலான மேற்கு நாடுகளின் நலனையும் அனுசரித்து போகக்கூடிய வகையிலான நகர்வுகளை முன்னெடுக்கையிலான நெருக்கடிகளை தளர்த்தும் நிலை உருவாகியுள்ளது. ■

-நன்றி - அருவி

# உயர் இரத்த அழுத்தம் புரிந்துகொண்டு கட்டுப்படுத்துங்கள்

> இரத்த அழுத்தமானது உறங்கும் போது சற்றுக் குறைந்தும், உணர்ச்சிவசப்படும் போது மிக உயர்ந்தும், காலை நேரத்தில் இயல்பாகவும், மாலை நேரத்தில் சிறிது உயர்ந்தும் காணப்படும். இது தற்காலிக மாற்றமே. உடல் ஓய்வு கொள்ளும்போது இரத்த அழுத்தம் இயல்புநிலைக்குத் திரும்பிவிடும்.

**கு.கணேசன்**

உலகச் சுகாதார நிறுவனம் கவலை தரும் ஒரு தகவல் அறிக்கையை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. 30-79 இடைப்பட்ட வயதுக்குள்ளானவர்களில் உலகெங்கும் 128 கோடிப் பேர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லும் அது, அடுத்து சொல்லும் விஷயம்தான் கூடுதல் கவலைக்கு உரியது. உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் கிட்டத்தட்ட பாதிப் பேர் (46%) தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பதையே உணராத நிலையில் இருப்பவர்கள் என்கிறது.

நாம் ஏன் இந்த விஷயம் தொடர்பில் கவனம் செலுத்துவது முக்கியம்? ஏனென்றால், உயர் இரத்த அழுத்தமே அகால மரணங்களில் கணிசமான உயிர்களைக் கவ்விச் செல்வதாக இருக்கிறது. இது இதயம், மூளை, சிறுநீரகம் தொடர்பான பல நோய்களுக்கு விதையாக இருப்பதுதான் இதன் புரிதலின் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது. இந்த நோயைப் பொறுத்தவரை நோயின் தன்மை அறிந்து செயல்பட்டால் 90% இதைத் தடுக்க முடியும். ஆகவே, இந்த நிமிடத்திலாவது இதைப் புரிந்துகொள்வோம், வாருங்கள்!

### இரத்த அழுத்தம்' என்றால் என்ன?

இரத்தக்குழாய்களில் ஓடும் இரத்தமானது இதயத்துக்கு வரும்போது ஒரு குறிப்பிட்ட வேகத்திலும், இதயத்திலிருந்து வெளியேறும்போது வேறொரு வேகத்திலும் செல்கிறது. இந்த வேகத்துக்குப் பெயர்தான் 'இரத்த அழுத்தம்'. பொதுவாக, ஒருவருக்கு இரத்த அழுத்தம் 120/80 மி.மீ. பாதரச அளவு இருந்தால், அது சரியான அளவு. இதில் 120 என்பது 'சுருங்கழுத்தம்' (Systolic pressure). அதாவது, இதயம் சுருங்கி இரத்தத்தை உடலுக்குத் தள்ளும்போது ஏற்படும் அழுத்தம். 80 என்பது 'விரிவழுத்தம்' (Diastolic pressure). அதாவது, இதயம் தன்னிடம் இருந்த இரத்தத்தை வெளியேற்றிய பிறகு, தன்னளவில் விரிந்து உடலிலிருந்து வரும் இரத்தத்தைப் பெற்றுக்கொள்கிறது; அப்போது ஏற்படும் இரத்த அழுத்தம். ஒருவருக்கு 140/90 மி.மீ.க்கு மேல் இரத்த அழுத்தம் அதிகரித்தால், அது 'உயர் இரத்த அழுத்தம்'.

இரத்த அழுத்தமானது உறங்கும்போது சற்றுக் குறைந்தும், உணர்ச்சிவசப்படும்போது மிக உயர்ந்தும், காலை நேரத்தில் இயல்பாகவும், மாலை நேரத்தில் சிறிது உயர்ந்தும் காணப்படும். இது தற்காலிக மாற்றமே. உடல் ஓய்வுகொள்ளும்போது இரத்த அழுத்தம் இயல்புநிலைக்குத் திரும்பிவிடும். இதுபோல், கர்ப்ப காலத்தில் சில பெண்களுக்குத் தற்காலிகமாக இரத்த அழுத்தம் அதிகரிக்கும். குழந்தை பிறந்தவுடன் இது இயல்புநிலையை அடைந்துவிடும். ஆகவே, ஒருவருக்கு முதன்முறையாக இரத்த அழுத்தத்தை அளக்கும்போது, ஒரே ஒரு முறை மட்டும் அளந்துவிட்டு, அவருக்கு உயர் இரத்த அழுத்தம் உள்ளது என்று முடிவெடுக்கக் கூடாது.

### நிரந்தர உயர் இரத்த அழுத்தம்

பொதுவாக, வயது கூடும்போது இரத்த அழுத்தம் அதிகரிக்கும். உடற்பருமன், சிறுநீரக நோய், சலரோகம், பிறவியில் ரத்தக்குழாய் பாதிப்பு, அதிக இரத்தக்கொழுப்பு, புகை, மதுப் பழக்கம் உள்ளவர்கள், மன அழுத்தம், உறக்கமின்மை போன்ற பாதிப்பு உள்ளவர்கள், ஓய்வில்லாமல் பணிபுரிகிறவர்கள் ஆகியோருக்கு இரத்த அழுத்தம் அதிகரிப்பது வாடிக்கை. ஒருவருக்கு உண்மையான இரத்த அழுத்தத்தை அறிய, தொடர்ந்து சில நாட்களுக்கு 5 அல்லது 6 முறை ரத்த அழுத்தத்தை அளக்கிறார்கள். அவற்றில் 3 அல்லது 4 அளவுகள் 140/90-க்கு மேல் இருந்தால், அவருக்கு உயர் இரத்த அழுத்தம் உள்ளதாகக் கணிக்கிறார்கள். பரம்பரையில் உயர் இரத்த அழுத்தம் உள்ள குடும்பத்தில் பிறந்தவர்களுக்கும், இதய நோய், நீரிழிவு, சிறுநீரக நோய் உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்தம் 130/90-க்கு மேல் இருந்தால், உயர் இரத்த அழுத்தம் உள்ளதாகக் கணிக்கிறார்கள்.

இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் மாதம் ஒரு முறையும், சிகிச்சையின் பலனால் இரத்த அழுத்தம் நல்ல கட்டுப் பாட்டில் உள்ளவர்கள் 3 மாதங்களுக்கு ஒரு முறையும் தங்கள் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக்கொள்வது நல்லது.

இங்கு இரத்த அழுத்த வகைகள் குறித்துப் பேசுவதற்குக் காரணம், இந்த வகைகளை அடிப்படையாக வைத்துத்தான் இதற்கான சிகிச்சை அமைகிறது. எனவே, உயர் இரத்த அழுத்த நோய்க்கு மருத்துவர் ஆலோசனை இல்லாமல், நீங்களாகவே மருந்துக் கடைக்குச் சென்று வாங்கிச் சாப்பிட்டால் அது பலன் தராது.

### அறிகுறிகளும் பாதிப்புகளும்

தலைவலி, தலைச்சுற்றல், மயக்கம், வாந்தி, மூக்கில் இரத்தக்கசிவு, நடக்கும்போது மூச்சு வாங்குதல், நெஞ்சுவலி, கால்வீக்கம், களைப்பு, படபடப்பு ஆகியவை உயர் இரத்த அழுத்த அறிகுறிகள். ஆனால், பெரும்பாலோருக்கு இந்த அறிகுறிகள் எதுவும் வெளியில் தெரியாது. இதுதான் கவலை தரும் விஷயம். திடீரென்று மயக்கம், பக்கவாதம், மாரடைப்பு என்று ஏதாவது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். அப்போது பார்த்தால் இரத்த அழுத்தம் 180-க்கு மேல் அதிகரித்திருக்கும். உடலில் அமைதியாக இருந்து ஆபத்தை வரவழைக்கும். அதனால்தான், இதற்கு 'அமைதியான ஆட்கொல்லி நோய்' என்ற பெயரும் இருக்கிறது.

உயர் இரத்த அழுத்தம் இதயத்தைப் பாதிக்கும்போது இதயம் வீங்கிவிடும். அது துடிப்பதற்குச் சிரமப்படும். மாரடைப்பு வரும். மூளை பாதிக்கப்படும்போது பக்கவாதம் வரும். மறதி வரும். மூளையில் இரத்தக்கசிவு ஏற்படுமானால், மயக்கம் ஏற்படும். மரணம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. இது கண்ணைப் பாதித்தால், திடீரென்று பார்வை பறிபோய்விடும். உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குச் சிறிது சிறிதாகச் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும்.

### தவிர்க்கவும் தப்பிக்கவும்

எந்தவிதத் தொல்லையும் கொடுக்காமல் உடலில் மறைந்திருக்கும் உயர் இரத்த அழுத்தத்தை, காலமுறைப்படி மருத்துவரிடம் சென்று இரத்த அழுத்தத்தை அளந்து கொள்வதன் மூலம் எளிதில் தெரிந்துகொள்ளலாம். முப்பது வயது ஆனவர்களும், குடும்பப் பின்னணியில் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களும் வருடம் தவறாமல் 'முழு உடல் பரிசோதனை' செய்துகொள்ள வேண்டியது அவசியம். உயர் இரத்த அழுத்தம் இருப்பதை ஆரம்பத்தி லேயே தெரிந்துகொண்டால் மாத்திரை இல்லாமலும் சமாளிக்கலாம்.

உயர் இரத்த அழுத்தநோய்க்கு முதல் எதிரி உப்பு. நாம் பொதுவாக தினமும் 20 கிராம் வரை உப்பை உணவில் சேர்த்துக்கொள்கிறோம். நாளொன்றுக்கு அதிகபட்ச மாக 5 கிராம் உப்பு போதுமானது. உப்பு நிறைந்த உணவுப்பொருள்களான ஊறுகாய், கருவாடு, அப்பளம், வடகம், சிப்ஸ் போன்ற நொறுக்குத்தீனிகள் ஆகியவற்றை முழுமையாகத் தவிர்க்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட உணவுகள், துரித உணவுகள், செயற்கை வண்ண உணவுகள் போன்றவற்றில் கூடுதலாகவே உப்பு இருக்கும்.

இவற்றை அவசியம் தவிர்க்க வேண்டும். கொழுப்பு அதிகமுள்ள உணவு களான இறைச்சி வகைகள், முட்டையின் மஞ்சள்கரு, தயிர், நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம், சீஸ் இனிப்பு வகைகள், ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது.

சிகரெட், பீடி, சுருட்டு புகைக்கும் பழக்கத்தால் உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் வாய்ப்பு 600 மடங்கு அதிகரிக்கிறது. எப்படி? புகைப்பதால் உடலுக்குள் நுழையும் 'நிகோட்டின்' இரத்தக்குழாய்களைச் சுருக்கிவிடும். இதனால், இரத்த அழுத்தம் அதிகரித்துவிடும். மேலும், சுருங்கிய இரத்தக்குழாயில் கொழுப்பு படிந்து மாரடைப்புக்கு வழிவகுத்துவிடும். மது அருந்துபவரின் இரத்த அழுத்தம், மது அருந்தாதவரை விட, இரு மடங்கு அதிகரிக்கிறது என்பது உறுதியாகியுள்ளது. ஆகவே, புகை, மதுப் பழக்கத்தை விரட்ட வழி தேடுங்கள்.



### நார்ச்சத்தும் பழங்களும் உதவும்

பொரித்த உணவுகளுக்குப் பதிலாக ஆவியில் வேகவைத்த உணவுகள் ஆரோக்கியத்துக்கு உகந்தவை. அசைவப் பிரியர்கள் வாரம் ஒரு நாள் கோழிக்கறி அல்லது மீன் சாப்பிட்டுக்கொள்ளலாம். கோப்பி, தேநீருக்குப் பதிலாகப் பழச்சாறு, லெமன் ரி, கிரீன் ரி குடிக்கலாம். இவற்றில் ஆன்டிஆக்ஸிடன்ட் உள்ளது. இது இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது.

நார்ச்சத்து இரத்த அழுத்தத்தைக் குறைப்பதோடு, இரத்தத்தில் உள்ள கொழுப்பையும் குறைக்கும். சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும். உடல் எடையைக் குறைக்கும். இதனால், உயர் இரத்த அழுத்தம் மட்டுமல்ல; மாரடைப்பு வருவதும் தடுக்கப்படும். கோதுமை, கேழ்வரகு, சோளம் போன்ற முழுத் தானியங்கள், தக்காளி, புரோக்கோலி, ஸ்ட்ராபெரி, கொய்யா, மாதுளை போன்ற பழங்கள், போஞ்சி, பட்டாணி போன்ற பயறுகள், புதினா, மல்லி போன்ற பச்சை இலைகளில் நார்ச்சத்து அதிகம்.

பொட்டாசியம், கால்சியம், மெக்னீசியம் ஆகிய தாதுக்கள் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றன. தினமும் பால் சாப்பிடுங்கள். இதில் கால்சியம் உள்ளது. ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை, வாழைப் பழம், சோயாபீன்ஸ், உளுந்து, கிழங்குகள், முட்டைக் கோஸ், காலிஃபிளவர், பருப்புக் கீரை, முருங்கைக் கீரை, ஓட்ஸ், இளநீர் மற்றும் மீன் உணவுகளில் பொட்டாசியம், மெக்னீசியம் சத்துகள் அதிக அளவில் உள்ளன. இவற்றையும் தினசரி உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

இரத்த அழுத்தம் எகிறாமல் இருக்க, உடல் எடையைக் கட்டுப்படுத்துங்கள். குறிப்பாக, தினமும் 40 நிமிடங்கள் வேகமாக நடக்க வேண்டும். உலகச் சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைப்படி வாரத்துக்கு 150 நிமிட நடைப்பயிற்சி அவசியமாகிறது.


வீட்டிலேயே செய்யக்கூடிய உடற்பயிற்சிகள், நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் போன்றவையும் எடைக் குறைப்புக்கு உதவும்.

தினமும் குறைந்தது 6 மணி நேரத் தூக்கம் அவசியம். வாரம் ஒரு நாள் ஓய்வு அவசியம். ஓய்வு என்பது உடலுக்கு மட்டுமல்ல; உள்ளத்துக்கும்தான். மன அழுத்தமானது உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குப் பரம எதிரி. தினமும் தியானம் செய்தால், மன அமைதி கிடைக்கும். மனதுக்குப் பிடித்த விஷயங்களைச் செய்யுங்கள். வீட்டிலோ அலுவலகத்திலோ தேவையற்ற பரபரப்பைக் குறைத்துக்கொள்வது நல்லது. அடிக்கடி கோபப்படுவதையும் உணர்ச்சிவசப்படுவதையும் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். ■

# பயணங்கள்!

- மாலி -

3




# புலிகளே நடாத்தும் சேவையில் சரியான தகவல்கள் ஏன் கிடைப்பதில்லை?

இரவு சுமார் ஒரு மணியிருக்கும் பக்கத்து கொட்டகையில் 'பாம்பு' என்று சத்தம் கேட்டது. அதனை அடிப்பதும் அடுத்து கேட்டது. புடையன் பாம்பு என்றார்கள். வயதான ஒருவர் ஆஸ்த்மாவினால் சற்று அவதியுற்றுக்கொண்டிருந்தார்.

ஆக, பொழுது புலர்ந்திற்று. நம்பிக்கையோடும் எதிர்பார்ப்புகளோடும் புலர்ந்திற்று. கடைப்பக்கம் போய் இலேசாக முகத்தைக் கழுவி, தேநீர் அருந்தி வந்தேன். எல்லோரிடத்தும் ஒருவித உற்சசாகம்.

'ஏழு மணிக்கு பாஸ் கொடுப்பார்களாம்'.

பலர் உடைமைகளுடன் பாஸ் வழங்கும் கொட்டகைக்கு புறப்பட்டார்கள். "இரண்டு, மூன்று தினங்களாக பலர் நிற்கிறார்கள். வந்த ஒழுங்கின்படிதான் வழங்குவார்கள்." - சிலர் ஆறுதலாகவே இருந்தார்கள்.

"படகுகள் ஓடத் தொடங்கினால் அவ்வளவு பேரையும் இழுத்துத் தள்ளிவிடுவார்கள்."

'பதினொரு மணிவரைதான் பாஸ் கொடுப்பார்களாம்.' - இந்த தகவல் மனதுக்கு ஒரு மாதிரியாகவிருந்தது.

அநேகமாக எல்லோருமே அந்தக் கொட்டகையைச் சூழ்ந்தாயிற்று. வேறும் பலர் புதிதாக வந்துகொண்டிருந்தார்கள். வீதியில் வெள்ளம் காரணமாக பலர் பரந்தன், கிளிநொச்சியில் இரவு தங்கி வந்திருந்தார்கள். காதில் அடிபட்ட பேச்சு உண்மைதான். ஏழரை மணியளவில் 'பாஸ்' வழங்க ஆரம்பித்தார்கள். இளைஞர் ஒருவர் பஸ்காரரர் கொடுத்த பாஸ்களை வைத்து, ஒவ்வொருவராக பெயர் சொல்லி அழைத்தார். எல்லோரும் ஆவலாக இருந்தார்கள். முன்னைய தினங்களில் வந்தவர்கள்தான் அழைக்கப்படுவதாக பேசிக்கொண்டார்கள்.

பத்து மணியளவில் என்னுடன் வந்தவர்கள் அழைக்கப்படுவது தெரிந்தது. சிறிது நேரத்தில் நானும்போய், "நானும் இவர்களுடன்தான் ஒரே பஸ்ஸில் வந்தேன். வெளிநாட்டிலிருந்து வருகிறேன்" என்றேன்.

"என்ன பெயர், ஐயா" என்றார். கூறினேன். தன்னுடைய கையிலிருந்த பிறவுண் நிற என்வலப்புகளைப் பார்த்த பின்னர், "இல்லை, கொஞ்சம் பொறுத்திருங்கோ, ஐயா" என்றார்.

தாண்டிக்குளத்தில் அப்படி ஓர் என்வலப் என்னிடம் தந்திருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் அதைக் கொடுத்து திரும்பி வருவதற்கான 'பாஸை' எடுக்கும்படிதான் கூறியிருந்தார்கள். சிலவேளைகளில் அதுதான் என்னுடைய 'பாஸோ' என்று எண்ணினேன். இன்னொரு குடிசையில், அன்றைய தினம் வந்தவர்கள் தமது பாஸ்களைக் கையளித்துக்கொண்டிருந்தார்கள். அங்கு சென்று விடயத்தைக் கூறியபோது, அந்த என்வலப்பைத்தான் கேட்டார்கள். முதல் நாளே வந்து விட்டதைக் கூறி கொடுத்தேன். "ஆம், கூப்பிடுவார்கள்" என்றார்கள்.

பாஸ் வழங்குமிடத்தில் இப்போது அங்கு நின்றுகொண்டிருந்தவர்களிடையே ஓர் அமைதியின்மை, பதட்டம், அவசரம் ஏற்பட ஆரம்பித்திருந்தது. 11 மணி ஆகியிருந்ததுதான் அதற்கான காரணம். அத்தோடு, முதல்நாள் வந்தவர்கள் பலபேர் நிற்க, அன்றைய தினமே வந்தவர்களும் அழைக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் அமைதியாக இருந்தால்தான் அழைப்பேன் என்று இரண்டு, மூன்று தடவைகள் அழைப்பதை சிறிது நேரம் இடைநிறுத்தி, பேசாது நின்றார். அதன் பின்னர் அடுத்த தடவை அவ்விடத்தைவிட்டே அகன்றுவிட்டார்.

சுமார் ஒருமணி நேரம் வரவேயில்லை. சற்று வயதான பெண் ஒருவர் அடக்க இயலாது விம்மி அழுதார். பக்கத்திலிருந்தவர் ஏதோ சொல்ல, 'உங்களுக்குத் தெரியாது' என்று மாத்திரம் ஏதோ கூறிவிட்டு, அப்படியே சமாளித்து அடக்கிக்கொண்டார்.

'நாளைக்கு கல்யாணம் நான்தான் பெண்ணைத் தெத்தம்பண்ணிக் கொடுக்க வேண்டும்' என்று, அங்கலாய்ப்புடன் இன்னொருவர்.

இந்த பயணத்தில் மக்கள் எவ்வளவோ இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். அவர்களளவில் இது அவர்களின் தியாகம் பங்களிப்பு; அநுசரணை. அந்த மக்களுக்கு புலிகளே நடாத்தும் அந்த படகு சேவைபற்றி சரியான தகவல்களை தெரிந்துகொள்ள ஏன் இயலாதிருக்கிறது? தங்களுடைய அவசர நிலைமைகளை ஏன் அவர்களுடன் பேச இயலாதவர்களாக மக்கள் இருக்கிறார்கள்? அவர்களின் நிர்வாகத்தில், இங்கு மட்டும் இது ஆச்சரியமாக இருந்தது. திரும்பி வருகையிலும்கூட அப்படித்தான் சில குழப்பங்கள் அங்கு.

உண்மையில், அன்று அவர்கள் சற்று குழம்புவதற்கு நியாயமிருந்தது. முதல் நாள்களிலேயே வந்தவர்கள் ஏராளமானவர்கள் நிற்க, அன்று காலையில் வந்தவர்கள் அழைக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனாலும், 'எத்தனை மணிவரை பாஸ் வழங்கப்படும் அல்லது எத்தனை மணியானாலும் எல்லோரும் செல்லமுடியும்' என்ற ஏதாவது திட்டமான தகவல்கள் அந்த மக்களுக்கு கிடைத்திருந்தால் இந்த அங்கலாய்ப்பு அவர்களிடையே ஏற்பட்டிருக்காது. 11 மணிவரைதான் பாஸ் என்ற பேச்சே அங்கு அவர்கள் மத்தியில் நிலவியது. 'அது உண்மையில்லை; எல்லோரும் செல்லலாம்' என்றால், ஒருசில மணித்தியாலங்கள் ஏற்படும் தாமதத்தை அவ்வளவாக ஏன் அவர்கள் பொருள்படுத்தப்போகிறார்கள்?

இரண்டாயிரம் பேர்வரையில் அப்போது அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். மாவீரர்கள், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இப் பயணத்தில் முன்னுரிமை உண்டு.

பாஸ் தொடர்ந்தும் வழங்கப்பட்டது. நண்பகல் 12 மணிக்கு சற்றுப் பின்னதாக நான் அழைக்கப்பட்டேன். படகுக்குரிய சீட்டைப் பெற்றதும், 'ட்ராக்ரர்' ஒன்றில் படகுத் துறைவரை பயணம் அநுபவம்தான்.

ட்ராக்ரரிலிருந்து இறங்கியதும், படகுவரை பெட்டி, பொருள்களைக் கொண்டுவர சிலர் உதவுகிறார்கள்.

'பைபர் கிளாஸா'லான, சின்னச் சின்ன, இயந்திரங்கள் பூட்டிய படகுகள். டாக்ஸி தரிப்பு நிலையங்களில் ஒன்றன்பின் ஒன்றாக டாக்ஸிகள் வருவதுபோல வந்துகொண்டிருந்தன. 11 பேராக ஒவ்வொன்றிலும் ஏற்றினார்கள்.

சுற்றவர அமர்ந்ததும், படகு புறப்பட்டது. உயிர் பாதுகாப்புக்காக ஒவ்வொருவருக்குமான 'சோடி ஒல்லித் தேங்காய்கள்' படகில் இருக்கின்றன. 'எங்கேயோ இருந்துவந்த' பொலித்தீன் பைகளை பலரும் தலையை மூடி, அணிந்துகொண்டார்கள். இந்தப் பொலித்தீன் பைகளின் மகத்துவம் என்ன? தண்ணீர் அடிக்குமாம் தலை நனையாதிருப்பதற்கான முன்னேற்பாடு.

எழுபத்தைந்து வயதுக்கு மேலிருக்கும், ஒரு மூதாட்டி. அவரும் அந்தப் படகிலிருந்தார். துணைக்கு அவரது உறவினரான இன்னொரு பெண். "பேரப்பிள்ளையுடன் கதைத்துப்போட்டு வாறா" என்றார் அவர். விடுவார்களா, முசுப்பாத்திதான்!

சிறிதுதூரம் படகு அதற்காக அகழ்ந்து ஆழமாக்கப்பட்ட பாதையூடே மெதுவாக சென்றது. படகு சிப்பந்தி ஒரு கதை சொன்னார். 'காலையில் படகினுள் ஏறி, ஏதோ காட்டு கம்பு என்று கையை வைத்தபோது அது பெரும் 'வெங்கணாந்தி' பாம்பு. கரையிலிருந்து, படகு கட்டப்பட்டிருந்த கயிற்றால் அது படகை அடைந்திருக்கவேண்டும்' என்றார். நான் கை பிடித்துக்கொண்டிருந்த இடத்தை பார்த்தேன், காட்டுக் கம்பு எதுவுமோ என்று.

படகு இப்போது கடலில் வேகமாகவே புறப்பட்டது. அப்போது ஆரம்பித்ததுதான், ஒன்றரை மணித்தியாலத்தின் பின்னர் கிளாலி கரையை அடையும் வரை ஓய்வின்றி ஒரே குளிப்பு. முற்றிலுமே தோய்ந்துபோயிற்று. பொலித்தீன் பையால் மூதாட்டியின் முகத்தையும் மூடி விட்டிருந்தார்கள். 'நிற்பாட்டுங்கோ' என்று குரலெழுப்பிக் கொண்டிருந்தார் அவர்.

பகல் ஒரு மணிக்கு கிழம்பியிருந்தது படகு. யுத்த காலத்தில் இரவு நேரத்தில் அப்பயணம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தேன். அதற்கு இன்னமும் கருத்தூட்டுவதுபோல, திரும்பி வருகையில் பயணம் இரவு நேரமாயிருந்தது. 'ரோச்' வெளிச்சத்தில் சைகைகளுடன்... அப்போது அந்த இரவில் இரு படகுகள் நடுக் கடலில் மோதித் தப்பித்தும் கொண்டன.

ஆக, கிளாலி கரையில் கால் வைத்தபோது, அப்பாடா... நீல் ஆம்ஸ்ரோங்குக்கு எப்படி இருந்திருக்குமோ...?

பெட்டி பொலித்தீன் பையால் சுற்றப்பட்டுத்தானிருந்தது. ஆனாலும், கிளாலி கரையில் தூக்கியபோது பாரம் அதிகரித்தேயிருந்தது.

நனைந்த ஆடைகளை மாற்ற பெண்களுக்கு ஓர் இடம் அமைக்கப்பட்டிருந்தது. ஆண்களும் பலர் மாற்றிக்கொண்டார்கள். இது என்ன பெரிய சமாச்சாரம்? திருக்கேதீஸ்வரத்தில் முன்னர் ஆண்களும் பெண்களும் பாலாவியில் தோய்ந்து, அதே ஆடைகளுடன் தீர்த்தக் காவடி எடுத்து வருவர்.

(16 ஆம் பக்கம் பார்க்க....)

# திரை விமர்சனம்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | அனபெல் |
| இயக்கம் | : | தீபக் சுந்தர்ராஜன் |
| இசை | : | கிருஷ்ண கிஷோர் |
| நடிப்பு | : | விஜய் சேதுபதி, டாப்ஸி, ஜெகபதி பாபு, யோகி பாபு |
| வெளியீடு | : | 17 செப். 2021 |

இந்தியாவின் சுதந்திர காலத்திற்கு முந்தைய ராஜாவான விஜய் சேதுபதி, லண்டனிலிருந்து வந்த வெள்ளைக்கார பெண்ணான டாப்ஸியைப் பார்த்ததுமே காதல் கொள்கிறார். டாப்ஸியும் அவர் மீது காதலில் விழுகிறார். தனது காதலிக்காக பிரமாண்டமான மாளிகை ஒன்றைக் கட்டுகிறார் விஜய். திருமணத்திற்குப் பின்பு அதில் குடியேறுகிறார்கள் தம்பதியினர். அந்த மாளிகையைப் பார்த்து பொறாமைப்படும் ஜமீன்தார் ஜெகபதிபாபு அந்த மாளிகையை அடைய நினைக்கிறார். விஜய் சேதுபதியை கேட்கவே அவர் மறுத்து விடுகிறார். இதனால் டாப்ஸியையும், விஜய் சேதுபதியையும் விஷம் வைத்துக் கொன்று அந்த மாளிகையை அடைகிறார். தனது ராஜா விஜய் சேதுபதி மரணத்திற்குப் பழி வாங்கத் துடித்த அவரது உதவியாளர் யோகி பாபு சாப்பாட்டில் விஷம் வைத்து ஜெகபதிபாபு குடும்பத்தினரைக் கொலை செய்துவிடுகிறார்.



2021இல் விஜய் சேதுபதி, டாப்ஸி தவிர அனைவரும் அந்த அரண்மனையில் பேயாக அலைகிறார்கள்.

திருடுவதைத் தொழிலாகக் கொண்ட, ராஜேந்திர பிரசாத், அவரது மனைவி ராதிகா, மகள் டாப்ஸி, மகன் சுனில் ஆகியோர் அந்த அரண்மனையில் எஞ்சியிருக்கும் ஜெகபதிபாபுவின் வாரிசு ஒருவரால் தங்க வைக்கப்படுகிறார்கள். பேய்களுக்குத் தலைவனாக செயல்படும் யோகி பாபு, அரண்மனைக்குள் வந்த டாப்ஸியால்தான் தங்களுக்கு விடிவு காலம் கிடைக்கும் என நினைக்கிறார். அது நடந்ததா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.


இடைவேளை வரை படத்தின் நாயகன் யோகிபாபுதான். இப்போது முன்னணி நகைச்சுவை நாயகனாக இருக்கும் யோகிபாபு வசனங்களை சேர்த்து முதல் பாதியை மேலும் கலகலப்பாக்கியிருக்கலாம். ஆனால், படத்தில் சிறு பிள்ளைகள் ரசிக்கும்விதமான நகைச்சுவைகளே நிறைந்துள்ளன.

டாப்ஸி, ராதிகாவும் சிரிப்பு காட்ட முனைந்து தோற்று போனார்கள். ராஜேந்திர பிரசாத், சேத்தன், தேவதர்ஷினி, சுப்பு பஞ்சு, மதுமிதா, ஜோர்ஜ் மரியான், சுரேகா வாணி, சுனில் என பல கதாபாத்திரங்கள் கூடவே இருந்தும் காட்சிகளை மெருகூட்ட இயக்குநர் தவறிவிட்டார்.

இடைவேளைக்குப் பின் விஜய் சேதுபதி, டாப்ஸி இடையிலான முன்கதை காட்சிகள் மட்டும் நிறைவாக அமைந்துள்ளன. தமிழிலேயே பேசும் விஜய், ஆங்கிலத்திலேயே பேசும் டாப்ஸி. இருவருக்குமே மற்றவர் பேசுவது புரிந்து, காதல் பார்வைகளை வீசிக் கொள்வது தனிரகம். கூடவே, அடிக்கடி சிரிக்க வைக்கிறார் யோகி பாபு. இவர்களின் காதலில் இந்த அளவிற்கு கவனம் செலுத்திய இயக்குநர் நகைச்சுவையிலும் கவனம் செலுத்தியிருந்தால் படம் சுவாரசியம் பெற்றிருக்கும்.

இசையமைப்பாளர் கிருஷ்ணா கிஷோர் பாடல்களில் இன்னும் அதிக கவனம் செலுத்தியிருக்கிலாம். பாடல்களில் கோட்டை விட்டாலும், பின்னணி இசையில் சமாளித்துள்ளார். கௌதம் ஜோர்ஜ் ஒளிப்பதிவு அரண்மனையை பலவிதமான கோணங்களில் அழகழகாய் எடுத்துத் தள்ளியிருக்கிறது. அனபெல் டாப்ஸியை அழகாகக் காட்டுவதில் தனி கவனம் செலுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர்.

முன்கதை, டாப்ஸி, விஜய் சேதுபதி, யோகிபாபு ஆகியோருக்காக படத்தை ரசிக்கலாம்...



ஷங்கர் இயக்கத்தில் ராம் சரண், கியாரா அத்வானி, அஞ்சலி மற்றும் பலர் நடிக்கும் தெலுங்குப் படம் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஆரம்பமானது.

இந்தப் படத்தில் ரயில் சண்டை காட்சியை மிகப் பிரமாண்ட அளவில் படம் பிடிக்கவுள்ளனர். இதற்காக 10 கோடி இந்திய ரூபாய் செலவிடப்படவுள்ளதாம். இந்தக் காட்சி ராம் சரண் 100 அடியாட்களுடன் மோதுவது போன்று அமைக்கப்பட்டுள்ளதாம் என்கிறார்கள்.



வினோத் இயக்கத்தில் அஜித் நடிக்கும் வலிமை படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில் அதன் விளம்பர படம் வெளியானது.

“நீங்கள் கடைந்தெடுத்த விஷம் நாங்கள், சாத்தானின் அடிமைகள் நாங்கள். இருள் வலைதான் எங்கள் உலகம்”, என மோட்டார் சைக்களில் சாகசம் செய்தபடி பின்னணியில் குரல் ஒலிக்க தீ பொறி பறக்க, அனல் தெறிக்க அஜித் அறிமுகமாவது போன்று முன்னோட்டம் தொடங்குகிறது.

“அர்ஜூன் நீ என் ஈகோவைதொட்டுட்ட ஹெற்ரெடி போர் கேம்”, என வில்லன் கார்த்திகேயா பேச, அஜித் மோட்டர் சைக்கிளில் அதிவிரைவாக பயணிப்பதும், “நான் கேமை ஆரம்பிச்சு ரொம்ப நேரம் ஆச்சு தம்பி”, என அஜித் பேசும் வசனங்களும் இடம் பெற்றுள்ளன.

1.27 நிமிடம் உள்ள இந்த கண்ணோட்டம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. குறிப்பாக இந்த படத்தில் அஜித்தின் மோட்டார் சைக்கிள் சாகசம் ரசிகர்களுக்கு மிகப்பெரும் விருந்தளித்துள்ளதுடன், வெளியான இரு நாள்களிலேயே 75 இலட்சம் பார்வைகளை கடந்துள்ளது.




நாகர்ஜூனா கோஸ்ட் படத்தில் நடிக்கிறார். இதில் அவருடன் நடிக்க காஜல் அகர்வால் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். ஆனால், அவர் கர்ப்பமாக இருப்பதால் இந்தப் படத்தில் நடிக்க மாட்டார் என்று கூறப்படுகின்றது.

இதனால் அவருக்கு பதிலாக இலியானவை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறது.

காதலுக்காக வாய்ப்புக்களை துறந்த இலியானா, காதல் தோல்வியை அடுத்து அதை மறப்பதற்காக தற்போது படங்களில் தீவிர கவனம் செலுத்துகிறார். இந்த நிலையில், தனது பழைய கவர்ச்சி படங்களையும் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றார்.

சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடிப்பில் வெளியான வேதாளம் படம் தெலுங்கில் மீளுருவாக்கம் செய்யப்படுகின்றது. போலா சங்கர் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த படத்தில் சிரஞ்சீவி நடிக்கிறார்.

இந்தப் படத்திற்கான நாயகி பரிசீலனை நடைபெற்று வந்தநிலையில் தற்போது தமன்னா ஒப்பந்தமாகியுள்ளார். தமிழில் ஸ்ருதிஹாசன் நடித்த சட்டத்தரணி பாத்திரத்தில் அவர் நடிக்கவுள்ளார்.

மேலும் இதற்கு முன்பு சிரஞ்சீவி நடித்த சைரா நரசிம்ம ரெட்டியில் நடித்த தமன்னாவுக்கு இது சிரஞ்சீவியுடன் இரண்டாவது படமாகும்.






இயக்குநர் ஆனந்த ரமணன் இயக்கத்தில் உருவாகி உள்ள ஆவணத் திரைப்படம் ஆறாம் நிலம். ஈழத் தமிழர்களின் தொடர்ச்சியான வலிகளையும், துயரங்களையும் மையமாக வைத்து இப்படத்தின் கதைக்களம் அமைக் கப்பட்டு உள்ளது. இப்படத்தின் முதன்மை கதாபாத் திரத்தில் நவயுகா, சிறுமி அன்பரசி, நடிகர் மன்மதன் பாஸ்கி ஆகியோர் நடித்துள்ளனர்.

சிவ சாந்தகுமார் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்துக்கு சிந்தகா ஜெயக்கொடி இசையமைத்துள்ளார். சஜீத் ஜெயக்குமார் படத்தொகுப்பு பணிகளை மேற்கொண்டுள்ளார். இப்படத்தை நேரடியாக யூடியூபில் வெளியிட்டுள்ளனர்.

# ஏபி டி வில்லியர்ஸின் துடுப்பாட்டம்

## அழகியலா, வன்முறையா?

திினேஷ் அகிரா

ஏபிடி வில்லியர்ஸின் துடுப்பாட்டம் வன்முறையும் அழகியலும் ஒன்று சேரும் ஓர் அதிசய இரசவாதம். ஏபிடியின் ஒவ்வொரு அடியும் இடியாக வந்திறங்கினாலும் அதில் கொஞ்சம் நளினமும் மிளிர்வதைப் பார்க்கமுடியும். ரசிகர்களை மெய்மறக்கச் செய்வது அவர் அடிக்கும் இமாலய சிக்ஸர்கள் மட்டு மல்ல. இந்த அதிசய ரசவாதமும்தான். ஏபிடியை துடுப்பாட்டத்தின் சொர்க்கபுரியான சின்னசாமி ஸ்ரேடியத்தில் பார்ப்பது என்பது ஓர் அற்புத கண்காட்சி. இந்த முறை அதற்கான கொடுப்பினை இல்லாதது நமக்கெல்லாம் ஒரு துரதிர்ஷ்டம்தான்.

சுழல்பந்து வீச்சுக்கு எதிராக ஸ்லாக் ஸ்வீப், பௌன்சர் பந்தை பந்துவீச்சாளரின் தலைக்கு மேல் சாத்தும் ரென்னிஸ் ராக்கெட் ரொப் ஸ்பின் ஷொட், கவர் திசையில் அடிக்கும் நறுக்குத் தெறித்தால் போன்ற டிரைவ்கள்... ஆஹா அத்தனையும் கண்கொள்ளா காட்சிகள். பந்தை எதிர்கொள்ளும் முன்பே அதன் போக்கைக் கணித்துவிடும் திறனே, ஏபிடியை ஒரு ஏலியன் துடுப்பாட்ட வீரராக உருமாற்றியது. கிட்டத்தட்ட எதிர்காலத்தை முன்கூட்டியே கணிக்கும் ஒரு மந்திரவாதியை போல.

2000இற்குப் பிறகான துடுப்பாட்ட யுகத்தில் ஏபிடியை ஒரு நவரச நாயகன் என்றே சொல்ல வேண்டும். அவரால் 31 பந்துகளில் அதிவேக சதத்தையும் அடிக்க முடியும். 6 மணி நேரம் தாக்குப்பிடித்து நின்று அணியை சரிவில் இருந்து மீட்டெடுக்கவும் முடியும். டெஸ்ட் போட்டிக்கு ஒருமுகம்; ஒருநாள் போட்டிக்கு ஒருமுகம். அதுவே இருபது - 20 என்று வந்துவிட்டால் ஆறுமுகம். ஒவ்வொரு வீரருக்கும் பிடித்தமான முறைமை என ஒன்றிருக்கும். அதில்தான் அவர்களுடைய முழு வீச்சையும் பார்க்க முடியும். லாராவுக்கு டெஸ்ட், சச்சினுக்கு ஒருநாள் போட்டிகள். அதுபோல ஏபிடிக்கு இருபது -20. அவரைப் போல இருபது -20 கிரிக்கெட்டின் தலையெழுத்தை மாற்றி எழுதிய வேறு ஒரு துடுப்பாட்டவீரர் இருக்க முடியாது.

அடிப்படையில் ஏபிடி ஓர் அறிவாளி. அதிலும் இருபது - 20 என்று வந்துவிட்டால் அவர் ஓர் அதிஅற்புத அறிவாளி. மற்ற துடுப்பாட்ட வீரர்கள் கனவில்கூட நினைத்துப் பார்க்காததை செய்து காட்டும் ஒரு மாயமான். ஏபிடியின் மேதமைக்கு ஈடுகொடுக்க ரைகர் வூட்ஸ், மெஸ்ஸி போன்ற ஒரு சிலரே இந்த பூமியில் உள்ளனர். மற்ற துடுப்பாட்ட வீரர்கள் 20 பந்துகளில் 25 ஓட்டங்கள் அடிப்பதற்கும் ஏபிடி அதை செய்வதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. எடுத்த ஓட்டங்கள், எடுத்துக் கொண்ட நேரம் ஒன்றுதான். ஆனால், ஏதோவொன்று ஏபிடியை தனித்துக் காட்டுகிறது. இதை எப்படி விளக்கிச் சொல்வது என்று புரியவில்லை. விளக்கிச்சொல்ல முடியாத ஒன்றை செய்து காட்டுபவன் தானே அறிவாளி.

இருபது 20 கிரிக்கெட்டில் ஒரு துடுப்பாட்ட வீரர் தன்னுடைய இருத்தலுக்காக எதையாவது ஒன்றை விட்டுக் கொடுத்தாக வேண்டும். கிறிஸ் கெயிலுக்கு பவர் ப்ளே, கோலிக்கு ஸ்ட்ரைக் ரேட், பொலார்ட்டுக்கு கன்சிஸ்டன்ஸி. ஆனால், ஏபிடிக்கு அப்படி எந்த ஒரு விட்டுக் கொடுத்தலும் தேவைப்படுவதில்லை. உண்மையில் அவருக்கு டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில்தான் விட்டுக் கொடுத்து ஆட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

இருபது -20இல் ஆடுகளத்தை கணிப்பதற்கு அவருக்கு இரண்டு பந்துகள் மட்டுமே போதுமானது. சுமாரான ஆடுகளம் ஒன்றில் பெங்களூர் ஆடும்போது இதனைத் தெளிவாக பார்க்க முடியும். கோலி உட்பட எல்லாரும் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும்போது ஏபிடி மட்டும் வானத்தில் இருந்து இறங்கி வந்ததுபோல பட்டாசாக வெடிப்பார். அவருக்குள்ள மைதான உணர்திறன் அதனை சாத்தியப்படுத்துகிறது. இந்த மைதான உணர்திறன் குறித்து பிற்பகுதியில் பார்க்கலாம். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஏபிடிக்கான இடம் என்பது நடுவரிசை. இருபது -20 ஆட்டத்தில் ஓட்டத்தை வெகுவாக மட்டுப்படுத்தும் கட்டம் இது. இந்த வரிசையில் மற்ற வீரர்களின் சராசரி ஸ்ட்ரைக் ரேட் 110. ஆனால் ஏபிடிக்கு 130.

இதன் காரணமாக அவர் விரைவாக ஆட்டம் இழந்தாலும் அவருடைய துடுப்பாட்டம் அணிக்கு மறைபாதிப்பை ஏற்படுத்துவதில்லை. முதல் 20 பந்துகளில் 30 ஓட்டங்கள். அடுத்த 20 பந்துகளில் 40 ஓட்டங்கள். அதற்கும் அதிகமாக ஒரு 10 பந்துகள் கிடைத்தால் எதிரணி காலி. இதுதான் ஏபிடியின் இருபது 20 அணுகு முறை. இதனால்தான் அவருடைய ஒட்டு மொத்த ஸ்ட்ரைக் ரேட் 150இற்கு மேல் இருக்கிறது.

இருபது - 20 கிரிக்கெட்டில் ஏபிடியின் ஆதிக்கத்துக்கு அவருடைய நேர்மறை சிந்தனையும் ஒரு காரணம். அணி எந்த நிலையில் இருந்தாலும் அதைப்பற்றி எல்லாம் அவர் அலட்டிக் கொள்வதில்லை. இருபது -20இன் தாரக மந்திரம் எதுவென்பது ஏபிடிக்கு நன்றாகத் தெரியும். எதிர் தாக்குதல், 2016 ஐ.பி.எல். தொடரில் குஜராத் லயன்ஸ் அணிக்கு எதிராக அவராடிய பேயாட்டம் இதற்கு ஒரு நல்ல உதாரணம். பேயாட்டம் என்றவுடன் தாறுமாறான துடுப்பாட்டம் என நினைத்துக் கொள்ள வேண்டாம். அது ஒரு அழகான இனிங்ஸ்.



அரையிறுதி ஆட்டத்தில் 159 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது குஜராத் லயன்ஸ் அணி. நாக் அவுட் போட்டிகளில் சொதப்பும் பெங்களூர் அன்றைக்கும் சொல்லி வைத்தது போல சரியாக சொதப்பியது. முதல் ஐந்து ஓவர்களிலேயே கோலி, கெயில் உள்ளிட்ட முக்கிய 5 விக்கெட்களை இழந்து அணி தத்தளித்துக் கொண்டிருந்தது. விக்கெட்கள் ஒருபுறம் சரிந்து கொண்டிருக்க மறுமுனையில் ஆடுகளத்தினை - நிலையை மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தார் ஏபிடி. சரியாக 10 பந்துகள். அதன் பின்னர் சரவெடியை ஆரம்பித்தவர் 46 பந்துகளில் 78 ஓட்டங்களைக் குவித்தார். 78இல் 50 ஓட்டங்கள் பௌண்டரிகள்!

ஏபிடி துடுப்பாட்டத்தில் சொல்லிக் கொள்ளும்படி பெரிதாக எந்த ஒரு பலவீனமும் இல்லை. இதனால் இருபது -20 கிரிக்கெட்டில் மேட்ச் அப் என்பது ஏபிடியிடம் எடுபடுவதில்லை. இடதுகை ஸ்பின்னருக்கு எதிராகக் கொஞ்சம் தடுமாற்றம் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், அதை எப்படி சமாளிக்க வேண்டும் என்கிற தெளிவு ஏபிடிக்கு உண்டு. வேகப்பந்து வீச்சுக்கு எதிராக அவருடைய ஸ்ட்ரைக் ரேட் 155. சுழல்பந்து வீச்சுக்கு எதிராக 135. யோர்க்கர் பந்துகளுக்கு எதிராக 139. குறை வேகப் பந்துகளுக்கு எதிராக அவருடைய ஸ்ட்ரைக் ரேட் 189. ஓவ் ஸ்பின், லெக் ஸ்பின், இடதுகை ஸ்பின், சைனாமன், இடது கை வேகம், வலதுகை வேகம் என அனைத்து விதமான பந்து வீச்சுக்கும் எதிராக அவருடைய ஸ்ட்ரைக் ரேட் 130. "உன்னை என்ன தாண்டா பண்றது" என பந்துவீச்சாளர்கள் கதறவதைத் தவிர வேறு வழியில்லை. இப்படி எல்லா விதமான பந்துகளிலும் ஓட்டங்களைக் குவிக்க முடியும் என்பதால் துரத்தியடிக்கும்போது ஏபிடியால் பதற்றம் இல்லாமல் ஆடமுடிகிறது. ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையில்தான் ஏபிடி நன்றாக ஆடுவார் என சொல்வதற்கும் இல்லை. உலகின் முக்கியமான இருபது - 20 தொடர்கள் எல்லாவற்றிலும் 30க்கும் மேற்பட்ட சராசரியும் 130-க்கும் அதிகமான ஸ்ட்ரைக் ரேட்டும் வைத்துள்ளார்.

இருபது - 20 கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களுக்கானது என்ற பார்வை மிகவும் மேலோட்டமானது. உண்மையில் இருபது -20இல்தான் துடுப்பாட்ட வீரர்களுக்கு அபாயமும் அதிகம். பந்தை கணித்து ஆடுவது மட்டுமல்லாமல், கணித்ததை பெண்ட்ரிக்கும் அனுப்ப வேண்டிய கட்டாயம் உள்ளது. இது மாதிரியான ஒரு வடிவத்தில் எப்படி ஏபிடி கன்சிஸ்டன்சி இழக்காமல் அதிரடியாக விளையாடுகிறார்? ரொம்ப சிம்பிள். அவர் எதையும் யோசிப்பதே கிடையாது. பந்தை சந்திப்பதற்கு முன்பாக எல்லா வாய்ப்புகளையும் மனக்கண்ணில் ஓட்டிப் பார்க்கிறார். பிறகு எல்லாவற்றையும் அப்படியே மறந்தும் விடுகிறார். முழுப் பொறுப்பையும் தன்னுடைய உள்ளுணர்விடம் விட்டுவிட்டு அதன் போக்கில் துடுப்பை வீசுகிறார். ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் இயந்திரம் போல. ஆன்மீக ரீதியாக சொல்ல வேண்டும் என்றால் ஒரு ஜென் துறவியை போல.

ஏபிடிக்கு எல்லா வடிவங்களிலும் இதுதான் மகுடவாக்கியம் மற்றும் சூழ்நிலையைப் பொறுத்து தேவைக்கேற்றபடி அவருடைய உள்ளுணர்வு பொறுப்பைக் கூட்டியோ குறைத்தோ கொள்கிறது. இந்த அடிப்படை வலுவாக இருப்பதால்தான் ஏபிடியின் ஆட்டம் தொடர்ந்து சீராகவே இருக்கிறது. கிளாசிக்கான கவர் டிரைவோ அல்லது இன்னோவேட்டிவான ரிவர்ஸ் ஸ்கூப்போ அவருக்கு அடிப்படை ஒன்றுதான்.

வளைவு ஆட்டம், ஸ்கூப் ஷொட், ரிவர்ஸ் ஸ்வீப் போன்ற வஸ்துகளை ஏபிடி மற்றும் அவருடைய சமகாலத்தவர்கள் சொந்தம் கொண்டாட முடியாது. 80 வருடங்களுக்கு முன் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் லொறி கொன்சன்டைன் ஸ்கூப் ஷொட்டை கண்டுபிடித்தார். 70களில் கார்டன் கிரீனிட்ஜும் 90-களில் முஸ்டாக் முகமதுவும் ரிவர்ஸ் ஸ்வீப்பை பிரபலப்படுத்தினர். 2000த்தில் ஜொன்டி ரோட்ஸ் ஸ்விட்ச் ஹிட்டைக் கண்டுபிடித்தார். இவர்களின் தொடர்ச்சியாகத்தான் ஏபிடியின் 360° துடுப்பாட்டத்தை பார்க்க வேண்டும். ஆனால், ஏபிடியின் சிறப்பு என்னவென்றால் இதுபோன்ற ஷொட்களை ஆடும்போதும் அவர் தன்னுடைய நளினத்தை இழப்பதில்லை.

உதாரணமாக அவருடைய ரிவர்ஸ் வளைவு ஆட்டத்தை எடுத்துக்கொள்வோம். பந்தை சந்திக்கும் கடைசி நொடிக்கு முன்பாக கைகளை ஸ்விட்ச் செய்து 'ரம்ப்' செய்வார். ஒரு இடதுகை துடுப்பாட்டவீரர் போல. ஒரு சிறிய மணிக்கட்டு விலக்கம்தான். பந்து தேர்ட் மேன் திசையில் சிக்சருக்கு பறக்கும். கொஞ்சம் கூட வன்முறை என்பதே கிடையாது. இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உண்டு. ஒன்று அவர் கற்பனையாக தன்னுடைய ஸ்டேன்ஸ்- ஐ சுற்றி ஒரு சதுரத்தை வரைந்து கொள்கிறார். உயிரே போனாலும் அந்தக் கோட்டை அவர் தாண்டுவது கிடையாது. முன்பின்னாக, இடம், வலமாக நகர்ந்து பந்து வீச்சாளருக்கு போக்கு காட்டுவது எல்லாமே இந்தக் கோட்டுக்குள்தான். இன்னொரு காரணம் அவருக்கு இருக்கும் மைதான உணர்திறன். ரென்னிஸ், ரக்பி, உதைபந்து என பல்வேறு மைதான விளையாட்டுகளில் ஏபிடி கில்லி. சச்சினுக்கு எப்படி பந்தின் உணர்திறன் அதிகமோ அதுபோல ஏபிடிக்கு மைதான உணர்திறன் அதிகம்.

ஏபிடியின் துடுப்பாட்ட தொழில்நுட்பத்தில் ஜக் கலிஸின் தாக்கத்தை பார்க்க முடியும். கலிஸ் போலவே ஏபிடியின் Backlift கொஞ்சம் உயரம் குறைவானது. அதேநேரம் குளூஸ்னரின் பேஸ்போல் அணுகலையும் அவர் தன்னுடைய துடுப்பாட்டத்தில் பூசி மெழுகியுள்ளார். இப்படி இரண்டு நேரெதிர் போக்குகளை ஒன்று சேர்த்த இரசவாதம் தான் ஏபிடியை இந்த நூற்றாண்டின் நவீன துடுப்பாட்ட வீரராக உருமாற்றியது.

ஒரு துடுப்பாட்டவீரர் அறிவாளியாக உயர்ந்தானா இல்லையா என்பதை அளவீடு செய்வதற்கான சூத்திரம் ஒன்று உள்ளது. அது தன்னுடைய தோற்றப் போலிகளை தன்னுடைய காலத்திலேயே அவனால் உருவாக்க முடிந்ததா இல்லையா என்பதைப் பொறுத்தது. டெஸ்ட் கிரிக்கெட்டில் துடுப்பாட்ட தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வில்லியம்சனை ஏபிடியின் தோற்றப் போலி எனச் சொல்லலாம். தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மட்டும்!

குறைந்த ஓவர் போட்டிகளில் பட்லரை சொல்ல முடியும். ஆனால், இருவருடைய ஆட்டமும் ஓர் எல்லைக்குள் நின்றுவிடும். வில்லியம்சனால் 360° துடுப்பெடுத்தாட முடியாது. பட்லரால் டெஸ்டில் கிளாசிக்கலாக துடுப்பெடுத்தாட முடியாது.

ஏபிடியைப் போல இரண்டு மாறுபட்ட புள்ளிகளையும் இணைக்கும் இரசவாதம் எல்லாருக்கும் கைகூடிவருவதில்லை. ஆம், ஆப்ரஹாம் பெஞ்சமின் டிவில்லியர்ஸ் ஓர் இரசவாதிதான்! ●



**போர்ச்சுக்கீசியரால் தரைமட்டமாக்கப் பட்ட நல்லூர் கந்தசுவாமி கோவிலை, ஒல்லாந்து அரசின் அனுமதியுடன் செப்பனிட்டவர் மாயவரம் கிருஷ்ணய்யர். கந்தசுவாமி கோவிலில் வம்சாவளியாகப் பூசை செய்வதற்கு இவருக்கு நியமனப் பட்டோலை உண்டு.**

# நூற்றாண்டு நினைவு: கைலாசநாத குருக்கள் ஒரு கலைக் களஞ்சியம்

- அ. கா. பெருமாள்

இப்போது மயிலாடுதுறை தனி மாவட்டம். இதன் பழைய பெயர் மாயவரம். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது மாயவரம், மயிலாடுதுறை ஆனது. இந்த ஊரில் திருவாவடுதுறைக்குச் சொந்தமான சிவன் கோவில்கள் உள்ளன. இங்கே சிவப்பிராமணர்கள் நிறையப் பேர் வாழ்ந்தனர். இவர்களில் மாயவரம் கிருஷ்ணய்யர் (1696-1741) தமிழ், சமஸ்கிருதம் இரண்டிலும் நல்ல புலமையுடையவர்.

இவர் காலத்தில் மதுரை நாயக்கர் அரசு ஒய்ந்துவிட்டது. நாட்டில் குழப்பம். தஞ்சை மராட்டியர்கள், போரே வாழ்க்கை என்றிருந்த காலம். இஸ்லாமியப் படைத் தலைவர்கள் தங்கள் பங்குக்குக் கொள்ளையடித்தனர். இந்த மாதிரியான சூழ்நிலையில், மாயவரம் கிருஷ்ணய்யர் தன் குடும்பத்துடன் இலங்கையில் நல்லூர் என்ற ஊரில் குடியேறினார். இதே காலகட்டத்தில் நாகப்பட்டினம் கிருஷ்ணய்யர், கேரளம் வைக்கம் சிவராமகிருஷ்ண அய்யர் ஆகியோரும் தங்கள் குடும்பத்துடன் இலங்கையில் உள்ள நல்லூர், முனீஸ்வரம் ஆகிய ஊர்களில் குடியேறினர்.

மாயவரத்திலிருந்து நல்லூரில் குடியேறிய கிருஷ்ணய்யர், அங்கே தமிழ் நாட்டுப் பிராமணர் சிலரும் குடியேறக் காரணமாயிருந்தார். நல்லூர் கந்தசாமி கோவிலைச் சுற்றி ஊர் வளர்ந்தது. போர்ச்சுக்கீசியரால் தரைமட்டமாக்கப் பட்ட இந்தக் கோவிலை, ஒல்லாந்து அரசின் அனுமதியுடன் செப்பனிட்டவரும் மாயவரம் கிருஷ்ணய்யர்தான். இது நடந்தது 1773இல்.

கிருஷ்ணய்யருக்குக் கந்தசாமி கோவிலில் வம்சாவளியாகப் பூசை செய்வதற்கு நியமனப் பட்டோலை உண்டு. மாயவரம் கிருஷ்ணய்யரின் ஆறாம் தலைமுறையினரான கார்த்திகேயக் குருக்கள் (1878-1942), நல்லூர் கந்தசாமி கோவிலின் வளர்ச்சியில் தன் காலத்தைச் செலுத்தினார். இந்தக் கோவிலைப் பற்றி வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணியம் சிவாச்சாரியார் எழுதிய 'ஸ்ரீ கைலாசநாதர் புராணம்' எனும் தலபுராணம் உண்டு. இதில் கார்த்திகேயக் குருக்களின் பெருமை ஒரு சருக்கத்தில் வருகிறது.

கார்த்திகேயக் குருக்களுக்கும் சுந்தராம்பாளுக்கும் பிறந்தவர் பேரறிஞர் கைலாசநாதக் குருக்கள் (பிறப்பு 1921 ஒகஸ்ட்). அன்றைய காலகட்டப்படி எல்லாரையும்போல் தந்தையிடமும், தனிப்பட்ட சில ஆசிரியர்களிடமும் படித்திருக்கிறார்.

பிற்காலத்தில், குருக்களைப் பற்றி எழுதியவர்கள், "குருக்களின் சமஸ்கிருத உச்சரிப்பு துல்லியமாக உள்ளது" எனத் திரும்பத்திரும்பச் சொல்லுகிறார்கள்.

இதற்குரிய படிப்பு ஏழு வயதுக்கு முன்பே ஆரம்பமாகிவிட்டது. தந்தை, கோவில்களில் ஆகம காரியங்களைச் செய்யவோ குடமுழுக்கு விழா நடத்தவோ செல்லும்போது, கைலாசநாதரும் உடன் சென்றிருக்கிறார்.

சமஸ்கிருதத்தின் கம்பீரம், அதைச் சரியாக உச்சரிக்கும் முறையில் இருக்கிறது. இது சரியான ஆசிரியர்களிடம் கற்பதால் மட்டுமே உருவாவது: கைலாசநாதக் குருக்களுக்கு அது வாய்த்தது.

குருக்கள் வியாகரண சிரோன்மணியான தந்தையிடம் மட்டுமல்ல, மகோபாத்தியாயரான இராமய்யர் என்பவரிடமும் சமஸ்கிருதம் கற்றிருக்கிறார். பத்து வயதுக்குள் வேத அப்பியாசம் முடிந்துவிட்டது. குருக்கள் கிரந்தலிபியின் வழியே சமஸ்கிருத இலக்கியங்களைப் படித்திருக்கிறார். எட்டு வயதில் சமஸ்கிருதப் பத்திகளை வாசிக்க ஆரம்பித்துவிட்டார். கந்தசாமி கோவிலின் அருகே இருந்த மங்கையர்க்கரசி வித்தியா சாலையில் முறையான படிப்பை ஆரம்பித்திருக்கிறார்.

1942இல் குருக்களின் தந்தை இறந்தார் தாயும் இறந்தார். அப்போது இவருக்கு வயது 21தான். தந்தையுடன் 'கல்வி போம்' என்பது குருக்களுக்குப் பொருந்தாது. இதன் பிறகு பி. ஏ., எம். ஏ. பட்டங்களை எளிதாக எட்டியிருக் கிறார். 1947 முதல் 1953வரை கல்லூரி, பல்கலைக்கழகங்களில் ஆறு ஆண்டுகள் தற்காலிக விரிவுரையாளராக இருந்தபோது, 1953இல் பூனாவில் பிஎச்.டி. படிக்க வாய்ப்புக் கிடைத்தது் அரசு செலவில் படிக்கும் வாய்ப்பை இரண்டு ஆண்டுகள் பயன்படுத்திக்கொண்டார்.

குருக்கள் தன் பிஎச்.டி. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தலைப்பு, A Study of Saivism of the Epic and Puranic Periods. Together with its Ancillary Cult. With Special reference to the Saiva Religious Practices Prevalent in South India and Ceylon ஆகும். இராமாயணம், மகாபாரதம், பதினெட்டுப் புராணங்கள் ஆகியவற்றில் காணப்படும் சைவ மதம், தமிழக, ஈழத்துச் சிவன் கோவில்களின் ஆகம முறை ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்டது இந்த ஆய்வேடு.

குருக்களின் ஆய்வு வழிகாட்டி டாக்டர் கண்டேகார். 1955-56ஆம் ஆண்டுகளில் நடந்த ஆய்வேட்டை 1960இல் சமர்ப்பித்தார் குருக்கள். 1961இல் பிஎச்.டி. பட்டம் கிடைத்தது. இந்த ஆய்வேடு 1035 பக்கங்கள் கொண்டது; இரண்டு பகுதிகள். நிறையப் பின்னிணைப்புகளும் கொண்டது. இது இன்னும் அச்சில் வரவில்லை.

குருக்கள் பத்து வயதுக்குள் தமிழ், சமஸ்கிருதம் இரண்டும் படித்துவிட்டார். மெட்ரிக்குலேசனில் ஆங்கிலம், லத்தீன் படித்தார். கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பில் சிறப்புப் பாடமாகத் தமிழ், சமஸ்கிருதம், பாலி மொழிகளைப் படித்தார். குருக்கள் தமிழ் தவிர ஆங்கிலம், லத்தீன், பாலி, சமஸ்கிருதம் மொழிகளில் ஆழமுடையவர். தவிர பிரெஞ்ச், ஜெர்மன் மொழிகளையும் படித்துப் புரிந்துகொள்ளும் அளவுக்குக் கற்றவர்.

15 வயதுக்குள் ருத்ரம், கமகம், புருஷ சூக்தம், புண்யாக மந்திரங்கள், தைத்ரிய உபநிடதம் ஆகியவற்றைப் பாராயணம் செய்வார். முப்பது வயதுக்குள் இவற்றின் பொருள் கூறி ஒப்பிடும் அளவுக்குப் படித்துவிட்டார்.

இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் படித்தபோது (1946-50) டாக்டர் மின் பெட்றி ஹெய்மென் என்ற ஜெர்மானியர் சமஸ்கிருதப் பேராசிரியையாக இருந்தார். இவர் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாக இருந்தவர். குருக்களின் லத்தீன் ஆசிரியர் ரோ. முரிகேஷ் பாலி ஆசிரியர் மலலசேகரர் தமிழ் ஆசிரியர் சுவாமி விபுலானந்தர். இப்படி ஒரு பின்னணி உண்டு.

குருக்கள் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் படித்தது மட்டுமல்ல, பழம் நூல்களின் மூல ஏடுகளைத் தேடித் தமிழகமெங்கும் பயணம் செய்திருக்கிறார். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களுக்கு ஒரு சலுகை உண்டு. ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை, சம்பளத்துடன் விடுமுறை பெற்று வெளிநாட்டு நூல்நிலையங்களுக்குச் சென்று தம்மைப் புதுக்கிக்கொள்ளலாம். இதைக் குருக்கள் நன்கு பயன்படுத்தியிருக்கிறார்.

பூனாவில் பிஎச்.டி. ஆய்வு செய்யும் போதே (1955 - 57) சென்னை நூல் நிலையங்கள், தஞ்சை சரஸ்வதி மகால் போன்ற இடங்களில் சமஸ்கிருத மூல ஏடுகளைத் தேடியிருக்கிறார். நவாவரண பூஜை, சண்டீஹோமகீதா என்னும் இரண்டு நூல்களை ஏட்டிலிருந்து பிரதி செய்திருக்கிறார். தஞ்சையில் ஆறு மாதங்கள் தங்கி சரஸ்வதி மகாலில் மூல ஏடுகளைப் பிரதி செய்திருக்கிறார். பாண்டிச்சேரி பிரெஞ்ச் இன்ஸ்டிட்டியூட்டில் சில நாட்கள் இருந்தார். 1972, 1985ஆம் ஆண்டுகளில் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்.

இவரது பயணமே இரண்டு நோக்கங்களுக்காகத்தான். சமஸ்கிருத புத்தகங்களைத் தேடுவதற்கும், சிவன் கோவில்களைக் காணுதற்கும். இவர் காஞ்சிபுரம் மடத்தில் சில நாட்கள் இருந்தார். ஜயேந்திரருடன் சரளமாகச் சமஸ்கிருதத்தில் உரையாடி நிறைய விஷயங்களைச் சேகரித்திருக்கிறார். காஞ்சிப் பெரியவர் பற்றிப் பஞ்சரத்தினம் பாடினார். ஜயேந்திரர், குருக்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார். இக்காலத்தில் காஞ்சி மடத்திலிருந்த சமஸ்கிருத ஏடுகள் சிலவற்றைப் பிரதி செய்திருக்கிறார். காஞ்சியிலிருந்து மதுரை சென்று கன்னியாகுமரிக்குப் போனார். கன்னியாகுமரி பகவதியம் மனைப் பற்றிப் பஞ்சரத்தினம் பாடினார் இது வெளியாகவில்லை. குருக்கள் மெட்றிக்குலேசன் முடித்த தும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராய் வேலைக்குப் போக வேண்டிய சூழ்நிலை.

(16 ஆம் பக்கம் பார்க்க....)



# ஓம் சாந்தி...ஓம்...

மானிப்பாய் சுதன்

பதஞ்சலியோ திருமூலரோ கார்த்திக்கின் முன்னால் இன்று வந்தால்! கார்த்திக்கின் கேள்விகள் உங்களுக்கெல்லாம் மனச்சாட்சி இருக்கா? எவ்வளவு அருமையான யோகாசனங்களைத் தந்த நீங்கள்? இந்த சாந்தியாசனத்தை ஏன் தந்தீர்கள்? என்று கேள்விகளால் துளைத்தெடுத்திருப்பான்.

என்ன செய்வது ஒரு காலத்தில் மனைவி ஜெசி சாந்தியாசனம் செய்வதையே ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன்தான் இந்த கார்த்திக். ஆனால்..

கார்த்திக்குக்கும் ஜெசிக்கும் திருமணம் முடிந்த பின் இருவரும் வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்று திட்டம் தீட்டவே பல இரவுகளைத் தொலைத்திருந்தார்கள். சிவசங்கரி, லக்சுமி போன்றோரின் கதைகள் போல், பல திரைப்படங்களின் கதைகள் போல் தங்கள் வாழ்க்கையும் ஒரு நதிபோல ஓட வேண்டும், எப்பொழுதும் குடும்பத்தில் சந்தோசம் சலசலத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கற்பனையில் மிதந்தார்கள்.

கார்த்திக் தனக்குத் திருமணமான பின் மனைவியுடன் விண்ணைத்தாண்டி வருவாயா திரைப்படத்தை, தானும் மனைவியும் உருகி உருகி அன்பு வழிய பார்க்கவேண்டும் என்ற நினைவில் மனைவிக்கான கூறைப்புடவை எடுக்க முன்னரே அத்திரைப்பட சீடியை வேண்டிப் பத்திரமாக வைத்திருந்தான். ஆனால் விதி? படங்கள் அதிகம் பார்த்திராத ஜெசி படத்தின் எழுத் தோட்டம் முடிய முன்னரே நித்திரையாகிவிடுவாள். அன்பு உருகி வழிய விண்ணைத்தாண்டிப் பறக்கலாம் என்றிருந்தவன் ஜெசியின் வாயருகில் வீணீர் வடிவதை பார்த்துக்கொண்டு, பதினேழாவது முறையாக தனிமையில் ஜெசியாகிய திரிசாவை இன்று ரசித்துக்கொண்டிருக்கிறான்..

திருமணமான புதிதில், இஞ்சேப்பா நாங்க இரண்டுபேரும் வேலைக்கு போகிறவர்கள். அதனால் வீட்டுவேலைகளை இரண்டுபேரும் சமமாக பிரித்து செய்ய வேண்டும். மற்றவர்களை மாதிரி பெண்களின் கஸ்டங்களை புரிந்து கொள்ளாத ஆள் நான் இல்லை. ஆணாதிக்க குணமுமில்லை. மற்றவர்களுக்கு முன்னால் உன்னை வெருட்டி உருட்டி படம் காட்டுகிற ஆளுமில்லை. இன்றைக்கு என்னென்ன வேலை, யார் யார் செய்வதென்று பிரித்துக் கொள்ளுவோம்.

தனக்கு கணவனாய் நீ கிடைக்க நான் என்ன தவம் செய்தேனோ? என்பது போல் ஜெசி கார்த்திக்கைப் பார்க்க கார்த்திக் சொக்கித்தான் போனான். கார்த்திக்கின் கண்களில் மயக்கம் தெளிவாகத் தெரிய, இதுதான் சரியான நேரம் என வேலைகளைப் பிரிக்கத் தொடங்கினாள் ஜெசி.

காலையில் தேநீர் ஊற்றுவது நான். ஆனால் நான் காலையில் யோகாசனம் செய்வதால் நீங்கள் சுடுதண்ணியை வையுங்கோ, யோகா செய்து முடிய நான் தேநீர் ஊற்றுகிறேன் சரியா என்றாள் கெஞ்சலாக.

படுக்கையிலேயே தேநீர் கோப்பையுடன் மனைவி வருவதுதானே வழமை. சிவசங்கரியின் புத்தகங்களில் அப்படித்தானே வரும். பரவாயில்லை யோகா செய்யத்தானே! யோகா செய்தாத்தானே மனைவி திரிசா மாதிரி.. ஸ்லிம்மா இருப்பாள். சரி அப்படியே ஆகட்டும் என்றான் மனைவியின் கெஞ்சலின் மயக்கத்தில்.

நீங்க காலையில் வெளியில கூட்டித்துப்பரவு, நான் வீட்டுக்குள் கூட்டித்துப்பரவு செய்கிறேன்.

ம்..ம்..ம், அடியே வெளியில் நாலு பரப்பு காணியும், இரண்டறை வீடும் சரியோ?

என்னப்பா? நீங்க ஆம்பிளைப் பிள்ளை, எனக்காக இதைக்கூட செய்யமாட்டியளோ?

ஆம்பிளைப்பிள்ளை! அந்த ஒரு வார்த்தை - சரி நான் செய்கிறேன் என்று சொல்ல வைத் தது கார்த்திக்கை.

நீங்கதானே வீட்டுத் தலைவன் அப்ப நீங்கதான் கடைகளுக்குப் போய்வர வேண்டும்.

வீட்டுத் தலைவன்! சற்றே நெஞ்சை நிமிர்த்தியவாறே நல்ல யோசனை என்றான்.

இப்படிப் பல வேலைகளும் பிரிபட்டபோது கார்த்திக்கின் தராசுப்பக்கம் சற்று கீழ் நிற்பதாகவே பட்டது. ஆனாலும் கெஞ்சலிலும் கொஞ்சலிலும் சமனாகத் தெரிந்தது கார்த்திக்கிற்கு.

ஒரு நாள் வெளி வேலைகள் எல்லாம் முடிய தேநீருக்காக வீட்டுக்குள் வந்தவனுக்கு ஏதோ எரியும் வாசனை வர ஓடிச் சென்று குசினியைப் பார்த்தான். எரிவாயு அடுப்பில் கேத்தல், தண்ணீரெல்லாம் வற்றி அடி சிவந்து கொண்டிருந்தது.

சற்றுக் கோபத்துடன் அடுப்பை அணைத்தவன், ஜெசி யோகா செய்யும் அறைக்குள் போனான். அங்கோ அலைபேசியில் ஓம்சாந்தி ..ஓம்சாந்தி .. என குரல் போய்க்கொண்டிருக்க, ஜெசியோ மல்லாக்கா படுத்து கைகளையும், கால்களையும் பக்கவாட்டில் எறிந்துவிட்டு கண்ணை மூடி ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள்.

கார்த்திக்குக்கோ கேத்தலின் அடி சிவந்ததுபோல் அவனுக்கும் சிவக்க, கேத்தல் அடுப்பில எரிஞ்சுபோகுது நீ என்ன? யோகா செய்கிறேன் என்று மாரித்தவக்களை மாதிரி கிடந்து நித்திரை கொண்டிருக்கிறாய் என கத்தினான்.

ஜெசியோ நிதானமாக, மெதுவாக கைகளை எடுத்து இரண்டு கைகளையும் ஒன்றுடன் ஒன்று சேர்த்து தேய்த்து முகத்தில் மேலிருந்து கீழாக அழுத்தி துடைத்துக்கொண்டு கண்களை விழித்து முறைத்துப் பார்த்தாள்.

என்னப்பா? கத்துகிறியல்? சாந்தியாசனத்தில் இருக்கும்போது இப்படி குழப்பினால்? இன்றைக்கு நல்லாத்தான் இருக்கப் போகுது. என்றவளை இடைமறித்து கேத்தல் எரிஞ்சுபோறது தெரியாம என்ன செய்துகொண்டிருக்கின்றாய் எனக் கேட்டான் கார்த்திக்.

உங்களுக்குத் தெரியுந்தானே நான் யோகா செய்கிறது. கேத்தலில் தண்ணியை வைச்சா இடையில பார்க்க வேண்டும். அதைவிட்டிட்டு..

இருவரும் கடுப்பாகி காலை உணவும் இல்லாது, வேலைக்குச் சென்றனர். மாலை வேலையால் வந்ததில் இருந்து ஒரே தலைவலி என படுத்துவிட்டாள் ஜெசி. காலையில் சாந்தியாசனத்தை கார்த்திக் இடையில் குழப்பியதாலேயே தலைவலி வந்ததாக சொல்லி சொல்லி தலையைப் பிடித்துக் கொண்டிருந்தாள். கார்த்திக்கிற்கோ இன்று முழுவதும் கடைச் சாப்பாடாகவே முடிந்தது.

அடுத்தநாள் கார்த்திக் அதிகாலையே எழும்பவேண்டியதாக இருந்தது. சமைக்கவல்ல. கடைச்சாப்பாடுகளின் மகத்துவம் வயிற்றோட்டம் வெள்ள வோட்டமாகப் போக, வேலைக்கு விடுமுறை போடுமளவுக்கு இருந்தது.

இப்படியான நாட்கள் தொடர, கார்த்திக்கே தேநீரை ஊற்றிக் கொள்ள பழகிக்கொண்டான். இதனால் தனது தராசுப் பக்கம் கொஞ்சம் பாரமாக தெரியத்தொடங்கும் போதேல்லாம், ஜெசியைப் பார்ப்பவர்கள் எல்லாம், எப்பிடியப்பா இப்பிடி அழகா! ஸ்லிம்மா!!! இருக்கிறீங்கள் என்று கேட்க, மனிசன் உன்னில நல்ல கவனந்தான் போல எனக் கேட்கும் போது தராசு மீண்டும் சமநிலைக்கு வந்துவிடும்.

அதில் கொடுமையான சுவாரசியம் என்னவென்றால், ஜெசி யோகா செய்யும் போது குண்டலினி விழித்துக்கொள்ள ஜெசி யோகா விரிப்பில் இருந்து அரையடிக்கு உயர்ந்து அந்தரத்தில் மிதப்பதாகவும், அதனை கார்த்திக் கண்டதாகவும் வதந்திவேறு உலாவிக்கொண்டது நண்பர்கள் மத்தியில்.

இந்த வதந்தி எப்படி வந்தது? நான் எப்போது இப்படி சொன்னேன்? விடை தேடினான் கார்த்திக். ஒருமுறை கட்டிலில் ஜெசி சாந்தியாசனத்தில் மல்லாக்கா பப்பரக்கா என படுத்திருந்ததை கார்த்திக் இன்று ஜெசி கட்டிலுக்கு மேலே எல்லோ யோகா செய்தவா என்று பெருமையாகச் சொன்னதுதான் இப்படி மாறியிருக்கிறது என்பது விளங்கியது. அட எங்களது சுற்றம் இவ்வளவு அப்பிராணியாக இருக்கிறார்களே என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

இப்படி பல உசுப்பேத்தல்கள், கெஞ்சல்கள், கொஞ்சல்கள், வதந்திகள் என அலுத்துப்போய் காய்கறி வெட்டி வைத்தல், தேங்காய் திருகுதல், சோறு சமைத்தல் என கார்த்திக் ஒரு பக்கத்தால் நளபாகத்தில் முன்னேறிக்கொண்டிருக்க, அதன் பக்குவத்தில் ஜெசியும் உப்பிப் பருத்து வந்துகொண்டிருந்தாள். அத்துடன் இப்பொழுதெல்லாம் ஓம்சாந்தியின் நேரம் அதிகரித்திருந்தது.

இன்று வழமைபோல் சமைத்து முடித்து, காலைச்சாப்பாட்டை கோப்பையில் போட்டுவைத்துவிட்டு குளிக்கச் சென்றான் கார்த்திக். குளித்துவிட்டு வந்து பார்த்தால், ஜெசியின் யோகா அறை மூடியே இருந்தது. ஓம் சாந்தியும் போய்க்கொண்டிருந்தது. இன்று தலைவலி வந்தாலும் பரவாயில்லை என நினைத்துக்கொண்டே, கதவைத் தட்டினான் திறக்கவில்லை.

கார்த்திக் பதட்டமாகி கதவின் திறப்பு ஓடைக்குள்ளால் கூம் பண்ணிப்பார்த்தான் ஒரே இருட்டாக இருந்தது. காரணம் உட்பக்கமாக கதவில் திறப்பு இருந்தது. சன்னமான குரலில் “இஞ்சேப்பா இஞ்சேப்பா” என்ற சத்தம் கேட்டது உள்ளிருந்து. பதட்டம் அதிகமாக கதவை தள்ளியும் திறபடாமல் போக, ஜன்னல் பக்கம்போய் உள்ளே பார்த்தான். அங்கு ஜெசி தன் பருத்த உடம்புடன் எழும்ப ஏலாது எழும்ப முயற்சித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. **(16 ஆம் பக்கம் பார்க்க...)**

# ஓம் சாந்தி...ஓம்...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

பலம் கொண்ட மட்டும் கதவினைத் தள்ளி கதவின் திறாங்குகள் தெறிக்க உள்ளே போனவன், ஜெசியை கைத்தாங்கலாக தூக்கி கதிரையில் இருத்தினான். நாரிக்குள் பிடித்துவிட்டது. அசையக்கூட முடியவில்லை என்றவளை ஒருவாறு கார்வரை கொண்டுவந்து மருத்துவரிடம் கூட்டிச் சென்றான்.

மருத்துவர் எல்லாவற்றையும் பரிசோதித்து விட்டு, மாத்திரைகளைக் கொடுத்துவிட்டு, அம்மாவுக்கு உடம்பு பாரம் கூடிவிட்டது என்றார். திருமணமானால் இப்படியும் அம்மாவாகலாமோ என்ற கார்த்திக்கின் சிந்தனையை கலைத்த மருத்துவர், உடம்பைக் குறைக்க வேண்டும். இதற்கு மருந்துகள் மட்டும் போதாது உடற்பயிற்சிகளும் செய்யவேண்டும். யோகா செய்தால் இன்னும் நல்லது என்றவரை முறைத்தான் கார்த்திக்.

அது சரி .. ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம்.. இனி அது நடக்காது. நடக்கவும் விடமாட்டேன் என்று முணுமுணுத்த கார்த்திக்கை மருத்துவர் ஒரு மாதிரியாகப் பார்க்க, கைத்தாங்கலாக ஜெசியை அரவணைத்து இழுக்கும்போதுதான் கார்த்திக்கிற்கு தெரிந்தது, தராசு முழுவதுமாய் மூச்சுமுட்ட தன் பக்கம் அழுத்துவதனை உணரக்கூடியதாக இருந்தது.

ஜெசியும் எதையும் முறையாக கற்று செய்ய வேண்டும் என்பதனையும், சோம்பேறித்தனம் ஆரோக்கியத்தின் எதிரி என்றும் உணர்ந்து கொண்டாள். ■

# புலிகளே நடாத்தும் சேவையில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பெட்டியைத் தூக்கிக்கொண்டு நனைந்து போன உடையுடன் பஸ் தரிப்புவரை, சுமார் அரை மைல் தூரம் நடந்தேன். இப் பகுதியிலும் ட்ராக்ரர் சேவை இருக்கிறது.

பல இடங்களுக்கும் செல்லும் மினி பஸ்கள், வாடகைக் கார்கள், வான்கள், ஓட்டோக்கள் காத்து நின்றன. பஸ்ஸிலேயே செல்ல எண்ணி, ஏறினேன்.

நெரிசல்தான். 'புட் போர்ட்' பயணம் நிமிர்ந்து நிற்க இதமாக இருந்தது.

அத்தியடியிலுள்ள பஸ் நிலையத்துள் பஸ் சென்றதும், 'கேற்'றை மூடினார்கள். இறங்கி வெளியே வந்தபோது, சென்னை மீனம்பாக்க விமான நிலைய நினைவேதான். ஓட்டோ, சைக்கிள்காரர்கள் மொய்த்துக்கொண்டார்கள்.

ஒருவரிடம், 'திருநெல்வேலி செல்ல எவ்வளவு' என்றேன். சைக்கிளில் செல்லலாம், 150 ரூபா என்றார்.

நான் ஓட்டோவில் செல்லவே விரும்புகிறேன் என்று, ஓர் ஓட்டோவை நோக்கி சென்றேன்.

தொடர்ந்து வந்த அந்த இளைஞர், "ஐயா நாங்களும் உழைக்கத்தானே வேண்டும், சைக்கிளில் வாங்கோ" என்றார்.

சைக்கிளை அவர்தான் இயக்கவேண்டும். அதனால், மனதுக்கு அது சம்மதமாக இருக்கவில்லை. அதனாலேயே ஓட்டோவை விரும்பினேன். ஆனாலும், அந்த இளைஞனின் வற்புறுத்தலில் 'சரி' என்று சைக்கிளிலேயே ஏறினேன். படிப்பை இடைநிறுத்தி, பெற்றோருடன் குடிபெயர்ந்து, சைக்கிளோடும் கதையை அவர் கூறிக்கொண்டு வந்தார்.

மாலை ஆறரை மணிக்கு திருநெல்வேலியை அடைந்தேன்.

சுமார் 48 மணிநேர பயணம். சில சமயங்களில், பரவாயில்லை என்ற எண்ணமும் ஏற்பட்டது. மாட்டு வண்டி தவிர, அநேகமாக எல்லாவித போக்குவரத்து சாதனங்களிலும் தொடர்ந்த பயணம் அது.

கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு உறங்கலிருக்கைக்கு கட்டணம் 55 ரூபா. வவுனியாவிலிருந்து இப்பாலே வந்துசேர ஆயிரம் ரூபாவரை ஆகியிருந்தது.

இது அவர்கள் வாழ்வில் ஒரு 'சுமுகமான' பயணம். **(அடுத்த வாரம்)**

# கைலாசநாத குருக்கள்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஆனால், தொடர வில்லை. பி. ஏ. சேர்ந்துவிட்டார்.

எம்.ஏ. முடித்ததும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகள் தற்காலிக விரிவுரையாளர் பின் 1953இல் நிரந்தரம் அடுத்த ஆண்டே பிஎச்.டி. ஆய்வு ஆய்வை ஆரம்பித்தார். '1957இல் மறுபடியும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில். தொடர்ந்து கொழும்பு, யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களில் பணி. ஓய்வு பெற மூன்று மாதம் இருக்கும் முன்பே விலகினார் (1985). அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழறிஞர் சு. வித்தியானந்தன் துணைவேந்தராய் இருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத மொழித்துறைக்கு மட்டுமல்ல, இந்து நாகரிகத் துறைக்கும் தலைவராய் இருந்தார். இத்துறையின் முதல் பேராசிரியரும் இவரே (1974).

பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத் துறை உருவாவதற்கும் குருக்கள் ஒரு காரணம். இப்படி உருவாவதற்கான சூழ்நிலை அப்போது இருந்தது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பௌத்த நாகரிகம் என்ற துறை இருந்தது. அதனால், இந்து நாகரிகம் என்ற துறையை ஆரம்பிக்கலாமே என்ற கேள்வியைக் குருக்கள் எழுப்பியபோது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதற்கு ஒப்புதல் தெரிவித்தது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதப் படிப்பில் தமிழர், சிங்களவர் இருவரும் இருந்தனர். அதனால், அவ்விரு மொழிகள்வழியும், ஆங்கிலம் வழியும் சமஸ்கிருதத்தைக் கற்பிக்க வேண்டிய நிலை இருந்தது. 1961 முதல் தமிழ் அல்லது சிங்களம்வழி கற்பித்தால் போதும் என்றும் முடிவானது இதற்குக் குருக்களும் ஒரு காரணம்.

கைலாசநாதக் குருக்கள் இலங்கையில் போர் நடந்தபோது, தமிழகத்தில் இருந்தார். முழுநேரப் பயணம். கோவில்களைப் பார்ப்பது, குறிப்பெடுப்பது என்ற செயல் தொடர்ந்தது. சில கோவில் நிர்வாகிகளுக்குக் கோவில் பராமரிப்பு, ஆகமமுறை பற்றி ஆலோசனையும் வழங்கியிருக்கிறார்.

இலங்கைச் சிவன் கோவில்களுக்குக் கட்டடம் கட்டும்போதும், குடமுழுக்கு விழாக்களிலும் ஆகமக் கிரியைகள் செய்வதற்கும் சன்மானம் வாங்கவில்லை. அவரின் மேலுள்ள பெரும் மரியாதைக்கு இதுவும் காரணம். இவர் தன் வாழ்நாளில் பெரிய விருதுகளோ பாராட்டுகளோ பட்டங்களோ பெறவில்லை. பல்கலைக்கழக செனட் உறுப்பினராக இருந்தார்.

1994இல் இவரது கொழும்பு வாழ்க்கை முடிந்தது. அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை. அங்கே மகளுடன் வாசம். அவுஸ்திரேலியாவிலும் கோவில் பணிகள் செய்தார். ஆறு ஆண்டுகள் அங்கே வாழ்ந்தார். இவரது இறுதிக் காலம் மெல்போர்ன் நகரில் முடிந்தது (7.8.2000).

கைலாசநாதக் குருக்கள் 1921 முதல் 2000 வரை வாழ்ந்தார். இந்த 79 ஆண்டுகளில் எழுதியவை பத்துப் புத்தகங்கள் தமிழ்க் கட்டுரைகள் 81 ஆங்கிலக் கட்டுரைகள் 8, வெளியிடப்படாதவை சில. 1100 பக்கங்களுக்கும் மேற்பட்ட பிஎச்.டி. ஆய்வேடும் அச்சிடப்படவில்லை.

குருக்கள் எழுதிய நூல்களில் முக்கியமானவை: 'வடமொழி இலக்கிய வரலாறு' (1962), 'சைவத் திருக்கோவிற் கிரியை நெறி' (1963),'இந்துப் பண்பாடு: சில சிந்தனைகள்' (1988) ஆகியன.

'சைவத் திருக்கோவிற் கிரியை நெறி' என்ற நூல் கொழும்பு இந்து கலா அபிவிருத்தி சங்க வெளியீடாக முதலில் வந்தது (1963). அப்போது மிகக் குறைவான பிரதிகளே அச்சிடப்பட்டன. இலங்கைக் கோவில்களில் மிகப் பழைமையான ஸ்ரீமுன்னேஸ்வரம் கோவிலின் குடமுழுக்கு விழாவின் போது, பிரம்மஸ்ரீ நா. குமாரசாமி குருக்களின் நினைவாக வெளியிடப்பட்டது. இதன் பிறகு 29 ஆண்டுகள் கழித்துச் சில இணைப்புகளுடன் இதே நூலின் இரண்டாம் பதிப்பு ஸ்ரீமுத்து விநாயகர் வேதாகம ஆய்வு நிறுவனம் வழியாக வெளிவந்தது (1992). இது 324 பக்கங்கள் கொண்டது.

படங்கள் குறைவு. மூன்றாம் பதிப்பு 2001இல் வந்தது. இதில் படங்கள் உண்டு. நான்காம் பதிப்பு காலச்சுவடு பதிப்பகம் வழி வெளிவரப்போகிறது. இதை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருத மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையா ளரான பத்மநாப அய்யர் மேற்பார்வை யிட்டுச் சரிசெய்திருக்கிறார். இதில், அவரின் நீண்ட முகவுரையும் உண்டு.

இந்த நூல் புராண, இதிகாசங்கள் கூறும் சைவத்தையும், சைவ ஆகம மரபு பற்றியும், தென்னிந்தியக் கோவில்களில் நிகழும் பூஜை, ஆகமச் சடங்குகள் பற்றியும் ஆராய்ந்த செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்டது. குருக்கள் தன் சமகாலத்தில், இலங்கையில் கட்டப்பட்ட கோவில்களின் கட்டு மானத்திற்கும், தெய்வ விக்கிரகங்களைப் பிரதிட்டை செய்வதற்கும் உதவியிருக்கிறார்.

இலங்கையில் பெருமளவு கோவில் குடமுழுக்கு விழாக்கள் இவரது மேற்பார்வையில் நடந்தன. தமிழகத்துக் கோவில் குடமுழுக்கு விழாக் களுக்கும் இவரது ஆலோசனையைக் கேட்டிருக்கிறார்கள். காரைக்குடி, பிள்ளையார்பட்டி விநாயகர் கோவில் குடமுழுக்கு விழாவில் இவர் கலந்து கொண்டிருக்கிறார். இந்த அநுபவங்கள் எல்லாம்தான் இந்த நூலின் ஆக்கத்திற்குப் பயன்பட்டன.

குருக்கள் இந்த நூலின் முதல் பதிப்பு முகவுரையில் 'A Study of the Agama Ritual Tradition prevalent in the Saiva Temple of South India' என்னும் தலைப்பில் பத்துத் தொகுதிகளாக ஒரு கலைக்களஞ்சியம் வெளியிடும் அளவுக்கு தன்னிடம் தகவல்கள் உள்ளன் வெளியிட ஆசையும் உண்டு என்கிறார். ஆனால், வெளியான தாகத் தெரியவில்லை.

இந்த நூல் ஆகமக்கிரியைகளையும் அவற்றுடன் தொடர்புடையவற்றையும் சுருக்கித் தருவது. இந்த நூல் கோவில்களின் கிரியைகளை நடத்துவதற்குரிய வழிகாட்டி அல்ல. கோவில்களை வழிபடுபவர், கிரியைகளை எப்படிப் பின்பற்றினர், இந்த மரபு புராணம் எப்படி வழி வந்தது போன்றவற்றை விளக்குவது. இந்த நூலில் சமஸ்கிருத கலப்பு அதிகம். இதற்கு ஆசிரியர் "தமிழ் ஆக்கம் கொடுக்கலாம் என்றால் பொருள் வேறுபட்டு விடுபட்டுவிடும் அதனால் கொடுக்கவில்லை" என்கிறார். சைவ ஆகமம், கிரியை பற்றித் தமிழில் வந்த முதல் நூல் இது.

இலங்கையில் புகழ்பெற்ற செல்வந்தரும் கல்வியாளருமான இராமநாதன் அவர்களின் மனைவி திருமதி லீலாவதியின் நினைவாக ஒரு பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குருக்கள் நிகழ்த்தினார்.

தலைப்பு 'இந்துப் பண்பாடு: சில சிந்தனைகள்' (1985) என்பது. இப்பேச்சு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழி சிறுநூலாக வந்தது. பின்னர் 'தமிழியல்' வெளியீடாக அடிக்குறிப்புகளுடன் ஒரு பதிப்பு வந்தது. இப்பதிப்பில் எண்பது அடிக்குறிப்புகளும் நீண்ட நூற்பட்டியலும் உள்ளன.

கொழும்பு கலாநிலையம் வழி 'வடமொழி இலக்கிய வரலாறு', 'சமஸ்கிருத இலகு போதம்' என்னும் இரண்டு நூல்கள் வந்தன. (1962). 'வடமொழி இலக்கிய வரலாறு' திருத்திய பதிப்பாக 'நர்மதா பதிப்பகம்' வழி 1981இல் வந்தது. அப்போது இரண்டு பதிப்புகள் வந்தன. பின்னர் 2010இல் 'காலச்சுவடு' பதிப்பகம் வழி வந்தது. இப்பதிப்பு மூன்றுமுறை அச்சில் வந்தது.

வடமொழி இலக்கிய வரலாறு பற்றித் தமிழில் மிகக் குறைவாகவே நூல்களும் கட்டுரைகளும் வந்துள்ளன. வையாபுரிப்பிள்ளை 'இலக்கிய உதயம்' தலைப்பில் எழுதிய நூலின் இரண்டாம் பகுதியில் சமஸ்கிருத வேதங்கள் பற்றிக் கூறுகிறார். பரமேஸ்வர வர்மா என்பவர் மலையாள மொழியில் அமைந்த 'சமஸ்கிருத இலக்கிய வரலாறு' என்ற நூலை மொழிபெயர்த்திருக்கிறார் (1939). வேறு சில நூல்களும் உண்டு. ஆனால், சமஸ்கிருதம் முறையாகக் கற்று, வேதபாராயணம் செய்து, கற்பித்த ஒருவர் எழுதிய நூல் குருக்களின் 'வடமொழி இலக்கிய வரலாறு'. ரிக், யஜூர், சாம, அதர்வண வேதங்கள், பிரமாணம், ஆரண்யம், உபநிடதம், சூத்திரங்கள் ஆகியன பற்றிய செய்திகள் இந்நூலில் எளிமையாய் விளக்கப்படுகின்றன.

கைலாசநாதக் குருக்கள் எளிய தோற்றம் உடையவர். கல்லூரியில் படித்த காலத்தில் வேட்டி, சட்டை, சால்வை, முன்குடுமி சகிதம்தான் போவாராம். அப்போது, பல்கலைக்கழக வட்டாரங்களில் இந்தத் தோற்றத்துக்காக இவர் பிரபலமானார். இவரது மூதாதையர் பூர்வீகம் சோழநாடு. இவர் பிறந்தது, வாழ்ந்தது ஈழநாடு மறைந்தது அவுஸ்திரேலியா

**(காலச்சுவடு - ஒகஸ்ட் 2021)**

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் : 1 மணித்தியாலம்


- 1, 2 ஆகிய வினாக்களில் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச் சோடிகள் அடங்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

1.




(1) (2) (3)

2.



(1) (2) (3)

3. இந்த உருவைப் பூர்த்தி செய்வதற்குரிய மிகப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

- 4, 5 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?

4.



(1) (2) (3)


5.



(1) (2) (3)


- 6, 7 ஆகிய வினாக்களின் கோலத்திற்கேற்ப அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.

6.




(1) (2) (3)

7.



(1) (2) (3)

8. உரு A இல் காட்டப்பட்டுள்ள வட்ட வடிவக் கடதாசியை முறிந்த கோடு வழியே மடித்து உரு B இல் காட்டப்பட்டுள்ளவாறு முறிந்த கோடு வழியே வெட்டி அத்தாள் துண்டுகளாக்கப் பட்டது.



உருவம் A உருவம் B

வெட்டிய பின்னர் கிடைத்த துண்டுகளின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 6

9. வெற்றுக் கட்டத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


| MKLS | என்பது | விரதம் | எனின், | PCVT | என்பது | .................. |

(1) புதினம் (2) நண்பன் (3) பரமன்

10. | ரு. 536.50 | ஐக் குறியீடுகளில் | R.KAC.KB | எனக் காட்டலாம் எனின், ரு. 689.70 ஐ எவ்வாறு காட்டலாம்?

(1) R.CEH.LB (2) R.JLC.KB (3) R.CAH.CB

11. இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



(1) 8 (2) 9 (3) 10

# சரியான தீர்மானத்தை எடுக்கும் சந்தியில் நிற்கின்றது தமிழினம்

## சந்தர்ப்பத்தை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்கிறார் ஜனா எம்.பி.



கொழும்பு, செப். 26

**“தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் அனைவரும் சரியான தீர்மானம் எடுக் கும் சந்தியில் நிற்கின்றோம். தற்போதைய ஜனாதிபதி, அரசு மற்றும் இலங்கை பாதுகாப்புத் தரப்பின் செயற்பாடுகள் அதற்கேற்ற வகையிலேயே இருக்கின்றன. அதனைச் சரியாகப் பயன்படுத்துவது எமது கரங்களிலேயே உள்ளது.”**

- இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இலங்கையில் தற்போதைய அரசியற் சூழ்நிலை குறித்தும் தமிழ்த் தேசியத் தரப்புகளின் ஒற்றுமையான செயற்பாட்டின் தேவை குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வரலாற்றில் தோல்வியடைந்த இனமாக தொடர்ந்தும் எமது வரலாற்றை பதிவு செய்வதா? இல்லை வரலாற்றில் இருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் எமது தமிழ்த் தேசிய செல்நெறியினை சரியான வழித்தடத்தில் கொண்டு சென்று எமது இலக்கை அடைய நாம் செயற்பட்டோம் என்று பதிவு செய்வதா? என்பதைத் தீர்மானிக்கும் தருணத்தில் இன்று நிற்கின்றோம்.

இந்த வாய்ப்புமிகு தருணத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் அனைவரும் தமிழ் மக்களுக்கு சரியான வழித் தடத்தைக் காண்பிக்க வேண்டும். தனிப்பட்ட அமைப்பு நலன், தனிப்பட்ட கட்சி நலன், தனிப்பட்ட நபர் சார்ந்த நலன் எவையும் இது தொடர்பான தீர்மானம் எடுக்கும்போது கருத்தில்கொள்ளப்படாது தமிழ்த் தேசிய நலன் மட்டுமே கருத்தில் கொள்ளப்படவேண்டும். ஆனால், இடம்பெறும் நிகழ்வுகளும், நடத்தைகளும் இதற்கு முரணாகவே பளிச்சிடுகின்றன.

இது எவர் மீதும் வாசிக்கும் குற்றப்பத்திரிக்கை அல்ல. இன்றைய வாய்ப்பை எமக்காக மாற்றிக் கொள்ளவேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

நமது தனிப்பட்ட கட்சி, தனிப்பட்ட கூட்டு, தனிப்பட்ட செல்வாக்கை பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்களில் தேவையேற்படின் காட்டுவோம். அது ஏற்படுத்தும் பாதிப்பை விட இன்று நாம் ஒருமித்து பயணிக்காவிடில் ஏற்படும் பாதிப்பு எமக்கும், எம் இனத்துக்கும் கடந்த ஆறு தசாப்த கால எம் அரசியல் முனைப்புக்களையும் கபளீகரம் செய்து மீண்டும் பேரினவாதிகளின் கால்களில் மண்டியிட வைக்கும் என்பது மட்டும் திண்ணம் என்று என் அரசியல் அறிவு சொல்கின்றது.

என்மன ஆதங்கமும் இதுவே. புரிவதும், புரிந்தும் தன்னிலையில் மாறாது தமிழ்த் தேசியத்தை அழிப்பதும், தமிழ்த் தேசியப் பரப்பில் ஈடுபடும் அனைவருக்கும் பொருந்தும். இது அனைவருக்கும் சமர்ப்பணம்” - என்றார். (இ)

# வெற்றிலைக்கேணியில் மின்னல் தாக்கி உயிரிழந்த குடும்பஸ்தருக்கு கொரோனா

வடமராட்சி, செப். 26

யாழ்., வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணியில் மின்னல் தாக்கி உயிரிழந்த நபருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மற்றுமொருவர் மயக்கமுற்ற நிலையில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மேலும், மின்னல் தாக்கி உயிரிழந்தவர் 35 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையாவார். (இ-02)

# விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, செப். 26

விசேட தேவையுடைய மற் றும் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக் குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நாடளாவிய வேலைத் திட்டம் கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ தலைமையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

12 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட விசேட தேவையுடைய மற்றும் நாட்பட்ட நோய்களால் பீடிக்கப் பட்ட சிறுவர்கள் கொரோனாத் தொற்றால் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் உயிரிழக்கும் விகிதத்தைக் குறைக்கும் நோக்கில் ‘பைஸர்’ தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக கொழும்பு, குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் உள்ள விசேட தேவையுடைய மற்றும் நாட்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட சிறுவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்படு கின்றது.

இந்த வேலைத்திட்டத்தை எதிர்வரும் வாரம் முதல் நாட ளாவிய ரீதியில் விரிவுபடுத்த சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அத்தோடு விசேட தேவையு டைய மற்றும் நாட்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட சிறுவர்களுக்குத் தடுப்பூசி வழங்கும்போது சிறுவர்




வைத்திய நிபுணர்களின் அனுமதியும், முழுமையான மேற்பார்வையும் சுகாதார அமைச்சால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவுறுத்த லுக்கு அமைய இவ்வாறான சிறுவர்கள் அதிகமாகக் காணப்படும் குருநாகல் மற்றும் அநு ராதபுரம் மாவட்டங்களிலும் இந்தத் தடுப்பூசி வேலைத்திட் டம் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எதிர்காலத்தில் 12 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பிள்ளைகளுக்கும் பைஸர் தடுப் பூசி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சர் மேலும் கூறினார். (இ)





# 160 ரயில் பெட்டிகள் கொள்வனவு

கொழும்பு, செப். 26

இந்தியாவிலிருந்து 160 ரயில் பெட்டிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன என்று ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

ரயில்களில் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் புதிய பெட்டிகளைக் கொள்வனவு செய்யப்படுகின்றன என்று ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

அதற்கமைய, ஏற்கனவே 50 ரயில் பெட்டிகள் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும், ஏனைய பெட்டிகளைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# வவுனியாவில் 46 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

வவுனியா, செப். 26

வவுனியா மாவட்டத்தில் மேலும் 46 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள் ளன.

அதற்கமைய வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக 46 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# கிளிநொச்சியில் வயோதிபர் கொரோனாவால் உயிரிழப்பு

கிளிநொச்சி, செப். 26

கிளிநொச்சியில் உயிரிழந்த முதியவர் ஒருவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்த சின்னத்துரை மகாலிங்கம் (வயது 73) என்ற முதியவரது சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இதன்போது குறித்த முதியவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 334 பேர் கைது

கொழும்பு, செப். 26

நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 334 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 25 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 77 ஆயிரத்து 877 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 176 வாகனங்களில் நேற்றுமுன்தினம் பயணித்த 329 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)

## பயங்கரவாத...

உறுப்பினரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் இராஜாங்க அமைச்சரொருவரால் அச்சுறுத்தப்பட்ட அரசியல் கைதிகளை நேற்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராஜாங்க அமைச்சரால் துன்புறுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைச் சந்தித்து பேசியிருக்கிறோம். கடந்த 12 ஆம் திகதி மாலை 6.05 மணியளவில் சிறைச்சாலைக்கு பொறுப்பாக உள்ள இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலைக்கு வந்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ள கைதிகளை தன் முன்பாக கொண்டு வந்து நிறுத்தி அவர்களை மிரட்டி அனைவரையும் முழங்காலில் நிற்க வைத்து மிக மோசமாக நடந்து கொண்ட சம்பவம் பற்றியும் அதில் இருவரை மிகவும் கூடுதலாக பயமுத்தி தன் கைத்துப்பாக்கியை அவர்களின் தலையில் வைத்து சுடுவதற்கு ஆயத்தமான விடயங்கள் அனைத்தையும் நாங்கள் நேரடியாக கேட்டறிந்துள்ளோம்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அறிந்துள்ளோம். மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டுள்ளது. தற்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நியமித்துள்ள விசாரணைக்குழுவும் விசாரணை செய்கின்றது. இதனைவிடவும் கூடுதலான விசாரணைகள் இடம்பெறும் என நாம் அறிகின்றோம். இந்த சம்பவங்கள் உண்மையாக இடம்பெற்ற நிகழ்வுகள். இதில் எவருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.

கடந்த பாராளுமன்ற தினத்தில் இவ்விடயம் எழுப்பப்பட்டபோது இந்த விடயத்துக்கு பொறுப்பாக உள்ள அமைச்சரவை அமைச்சரான நீதி அமைச்சர் அலி சப்ரி இந்த சம்பவங்களுக்காக மன்னிப்பு கேட்டார். இரண்டு தடவைகள் திரும்ப திரும்ப மன்னிப்பு கேட்டார். கைதிகளிடமும் அவர்களின் உறவினர்களுக்கு இதன் காரணமாக ஏற்பட்ட மன உழைச்சலுக்காகவும் மன்னிப்பு கேட்டார். ஆகவே நடக்காத விடயத்துக்கு அவர் மன்னிப்பு கேட்கவில்லை.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் இந்த சிறைச்சாலைகளில் இருந்து தமிழ் பிரதேச சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட வேண்டும். கொரோனா காலத்தில் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அவர்கள் மாற்றப்பட்டு இருந்தவர்கள். எனவே யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற முடியாது என எவரும் சொல்ல முடியாது.

வவுனியாவில் உள்ளது விளக்கமறியல் சிறையே. அது சிறிய இடம். எனவே முன்னர் நிர்வாகத்துக்கு தேவையானதாக யாழ்ப்பாணத்துக்கு மாற்றியிருந்தது போல இவர்களது பாதுகாப்பு கருத்தியும் விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெற வேண்டுமாக இருந்தால் அவர்கள் அவ்வாறான சூழலுக்குள் மாற்றப்படவேண்டும். எனவேதான் அவர்கள் விசாரணைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியதாக இருக்கும். பயம் இல்லாமல் சாட்சியம் வழங்க கூடியதாக இருக்கும். வெளியில் இருக்கும் சாதாரண மக்களே சாட்சியம் வழங்க அச்சப்படும் சூழலில் சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டுள்ளவர்கள் அது குறித்து பயப்படுவது நியாயம் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். எனவே அவர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படவேண்டும் என அரசாங்கத்திடம் கோருகின்றோம். -என்றார்.

## மருதனார்மடம்...

தப்பித்து இந்தியாவில் தங்கியுள்ள தேவா மற்றும் ஜெனி ஆகியோர் இயக்குவதாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு முன்பாக பழக்கடை நடத்தும் மானிப்பாய் லவ் ஒழுங்கையைச் சேர்ந்த இந்திரன் நிரோஷ்குமார் (வயது-27) என்பவர் மீதே கடந்த முதலாம் திகதி இரவு 7 மணியளவில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு நடைமுறையில் இருந்த நிலையில் பொலிஸார், இராணுவத்தினர் முன்னிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் கழுத்து, காலில் பலத்த வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேரை யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று கைது செய்தனர். சுன்னாகம், மல்லாகம், மானிப்பாய் மற்றும் கோப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த 25-28 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களுக்கு வாள்களை செய்து கொடுத்த குற்றச்சாட்டிலும் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்களிடமிருந்து 3 வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வன்முறைகளில் ஈடுபட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற தேவா மற்றும் ஜெனி ஆகியோர் அச்சுறுத்திக் கூறியதால்தான் இந்த தாக்குதலை தாம் செய்ததாக விசாரணைகளில் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒருவர் அண்மையில் கோண்டாவில் காரைக்காலில் வீடொன்றுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர். (அ-03)

## ஜனாதிபதி...

னான சந்திப்பில், நிதியமைச்சர் பஸில் அளித்த விளக்கங்கள் திருப்தியானதாக இல்லை என்பதால் ஜனாதிபதியுடன் சந்தித்து பேச முடிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பங்காளிக் கட்சிகளின் இடையூறு அடிக்கடி வருவதால் , அதற்கு முடிவொன்றை காணும் வகையில் ஆளுங்கட்சி உயர்மட்டத்தில் மந்திராலோசனை நடத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அதன் முதற்கட்டமாக, ஆளுங்கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை இராஜினாமா செய்யவைத்து , வெளியில் உள்ள முக்கிய பிரமுகர்களை உள்வாங்குவது, அமைச்சரவையில் மாற்றங்களை செய்வது உட்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது.

எவ்வாறாயினும் ஜனாதிபதியுடான சந்திப்பு வெற்றியளிக்காத பட்சத்தில் அரசுக்குள் இருந்து சுயாதீன குழுவாக செயற்பட கட்சித்தலைவர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர் என அறியமுடிந்தது. (அ)

## ஊரடங்கு...

நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு நேற்று கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர், ஊடகங்களிடம் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

தற்போதைய நிலையில் நாடு சாதகமான பக்கத்துக்கு திரும்பியுள்ளது. தடுப்பூசி செலுத்தும் நாடுகளின் வரிசையில் நாம் முன்னேற்றமடைந்துள்ளோம். தொற்றாளர்கள் மற்றும் மரண எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

எனவே, முதலாம் திகதி ஊரடங்கு சட்டத்தை தளர்த்துவதற்கு எதிர்ப்பார்க்கின்றோம். இது தொடர்பில் 30 ஆம் திகதி இறுதி முடிவு எட்டப்படும். நாடு திறக்கப்பட்டாலும் சுகாதார நடைமுறைகள், கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்-என்றார். (அ)

# கொரோனா தொற்றால் மேலும் 79 பேர் மரணம்

கொழும்பு, செப். 26

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 79 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 609 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 79 பேரில் 38 பெண்களும், 41 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 10 ஆண்கள், 12 பெண்கள் என 22 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 57 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 31 ஆண்களும், 26 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## எங்களுக்குள்...

ஐ.நாவுக்கு அனுப்பிய கடித விவகாரத்தால் தமிழரசுக் கட்சியுடன் ஏற்பட்டுள்ள கருத்து மோதல் குறித்து

வவுனியாவில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய பொறுப்பு எங்களையும் சார்ந்திருக்கிறது. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிப்பட்ட கட்சிகள் பங்கு எடுக்க முடியாது. இது விடுதலை சம்பந்தமாக உருவாக்கப்பட்ட அமைப்பு. அந்த அமைப்பை சிதைப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது.

எமது மக்கள் பாரிய பிரச்னையை தாங்கிக் கொண்டு திண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த நிலையில் மாறி மாறி நாங்கள் கருத்து சொல்ல விரும்பவில்லை. சில பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்களைப் பற்றி பல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் கூட அதற்கான விளக்கத்தை எங்களாலும் சொல்ல முடியும் என்பது உண்மையான விடயம். எங்கள் இயக்கத்துக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. அந்த வரலாற்றையும் நாங்கள் சொல்ல முடியும். அதற்கான காரணங்களையும் சொல்ல முடியும். எங்கள் மக்களுக்காக, அவர்களது விடுதலைக்காக நாங்கள் துப்பாக்கி தூக்கியவர்கள்.

எப்பொழுதும் எங்களது சிந்தனை மக்களது விடுதலைக்காக இருக்கவேண்டும் என்பதே. ஆகவே, மாறி மாறி தனிப்பட்ட எதிர் கருத்துக்களை சொல்வதன் மூலம் மக்கள் வெறுப்படையும் தன்மை உள்ளது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றுமை இல்லாத காரணத்தினால் 10 பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றோம். வடக்கு - கிழக்கில் தேசியத்தோடு நிற்பவர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் கூட, தென்னிலங்கை கட்சிகளை சார்ந்து இருக்கும் தமிழர்களுக்கும் கூடுதலான ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. இதிலிருந்து மக்கள் நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்ற செய்தியை சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே பதிலுக்கு பதில் சொல்லாமல் விடுவதால் நாங்கள் அவர்கள் சொல்லும் விடயங்களுக்கு ஒத்துபோவதாக யாரும் கருதி விட முடியாது.

எங்களுக்கும் வரலாறு இருக்கிறது. பதில் சொல்ல முடியும். மக்கள் காணியில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோர் வரை பல பிரச்னைகளை எதிர்கொள்கிறார்கள். அது சம்பந்தமாக செயற்படுவதற்கான முயற்சியை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் மாற்று கருத்துக்களுக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. எவரவர் எப்படி செயற்படுகிறார்கள் என்று மக்களுக்கு தெரியும். அதனை மக்கள் முடிவு எடுக்கட்டும். எதற்காக நாங்கள் போராட்டத்தை மேற்கொண்டோமோ அதே சிந்தனையுடன் எங்கள் தலைவர்கள் விட்டுச் சென்ற பணியை செய்வோம். எங்கள் மக்கள் பாரிய அழுத்தங்களுக் குள் வாழ்ந்து கொண்டிருகிறார்கள். எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என காட்டினால் மக்கள் மனமுடைந்து மிகவும் மோசமான நிலைக்குச் செல்வார்கள். எங்கள் மீது உள்ள நம்பிக்கை சிதைக்கப்படும்போது சிங்கள கட்சிகளுடன் போகும் நிலையையும் உருவாகும். அதனால் நாம் மௌனம் காப்பது எங்கள் மீதான கருத்துக்களை ஏற்றுக் கொண்டோம் என்பது அல்ல-என்றார். (அ)

# பாடசாலைகள் ஆரம்பமானால் டிசெ. மாத விடுமுறை இல்லை

கொழும்பு, செப். 26

“தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர், ஒக்ரோபர் மாதம் முதல் பாடசாலைகளை கட்டங்கட்டமாக திறப்பதற்கு எதிர்ப்பார்க்கின்றோம். அவ்வாறு பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் வழமையாக டிசெம்பர் மாதம் வழங்கப்படும் விடுமுறை இம்முறை வழங்கப்படமாட்டாது.”

-இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அதேவேளை, பாடசாலைகளை நான்கு கட்டங்களாக ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி 200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் விரைவில் திறக்கப்படவுள்ளதாக எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## கிளிநொச்சியில்...

யில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடுப் பகுதியில் வசித்துவரும் பழனியாண்டி மகேந்திரம் (வயது-66) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

## மாகாண சபைகளில்...

தனியே அபிவிருத்திக்குரிய நிதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில் அபிவிருத்திச் சபை தலைவர்களுக்கு 100 மில்லியன் ரூபா நிதியும், இறுதியாக மாகாண சபைகளில் அங்கம் வகித்த உறுப்பினர்களுக்கு கட்சி பேதமில்லாமல் 20 மில்லியன் ரூபா நிதியும், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றோருக்கு 4 மில்லியன் ரூபா நிதியும் அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்படவுள்ளன.

மேலும் மாகாண சபைகளுக்குட்பட்ட ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் 1.2 மில்லியன் ரூபா மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி தேவைகளுக்காகவும் ,1.2 மில்லியன் பொது அபிவிருத்தித் தேவைகளுக்காகவும் மேலும் 6 இலட்சம் ரூபா சுற்றாடல் மற்றும் சமூக நல அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமசேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள மானியங்களை “கம சமக பிலி சந்தரக்” எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அனைத்துவித பிரதேச அபிவிருத்திக்குரிய மானியங்கள் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாடு மக்கள் பிரதிநிதிகளுடையது என்றும் இந்த மானியங்கள் விரைவாக மக்களை சென்றடைவதே இம்முறை வரவு -செலவுத் திட்டத்தின் பிரதான நோக்கமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாடு
Eelanadu




# புதிய பிறழ்வுகளை கண்டறிவதற்காக பரிசோதனைகளை அதிகரிக்கவேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, செப். 26

விஞ்ஞான அடிப்படையில் பி.சி.ஆர் மற்றும் விரைவான அன்ரி ஜென் சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தால், கொரோனா வைரஸ் தொடர்பான புதிய மாறுபாடுகள் மற்றும் சிக்கல்களை சுகாதார அதிகாரிகள் அடையாளம் காணமுடியும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் வைத்தியர் ஹன்சமல் வீர சூரிய தெரிவிக்கையில்-

நடத்தப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் ஒரு தொற்று நோயை அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியாது. சமூகத்தில் தொற்றாளர்களை கண்டறிந்து கட்டுப்படுத்த சீரற்ற சோதனைகளை அதிகரிப்பதன் அவசியம்.

அவ்வாறு செய்யத் தவறினால் வைரஸின் புதிய பிறழ்வுகளை அடையாளம் காண முடியாமல் போகும்.

இலங்கையில் புதிய மாறுபாடுகள் தோன்றுகிறதா என்று சுகாதார அதிகாரிகளுக்கு தெரியாது.

தடுப்பூசிகள் செலுத்தப்பட்டவுடன் தொற்றுநோய் குறையும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்க முடியாது. எவ்வாறாயினும், இலங்கையின் சனத்தொகையில் 70 வீதத்துக்கும் அதிகமானோர் முழுமையாக தடுப்பூசி போட்டால் தொற்று நோயை ஓரளவுக்கு கட்டுப் படுத்த முடியும் - என்றார். (அ)

# காரில் கஞ்சா கடத்திச் சென்ற பொலிஸ் அலுவலர் சிக்கினார்!

முல்லைத்தீவு, செப். 26

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு காரில் கஞ்சா கடத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் சிக்கியுள்ளார்.

ஏ-9 வீதியில் மாங்குளம் பகுதி யில் வைத்து காரை சோதனையிட்ட பொலிஸார் 6 கிலோ கஞ்சாவுடன் பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவர் உள்ளிட்ட மூவரை கைது செய்துள்ளனர்.

இவர்கள் கடத்தலுக்கு பயன் படுத்திய காரும் பறிமுதல் செய் யப்பட்டுள்ளது.

புத்தளம் பொலிஸ் நிலையத் தில் கடமையாற்றும் புத்தளத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அவரது மனைவியும், மைத்துனரான நெச்சிகாம பகுதியை சேர்ந்த 25 வயதுடை யவரும் அவரது மனைவியும், யாழ்ப்பாணம், கொடிகாமம் பகுதியை சேர்ந்த 32 வயதுடை யவரும் பயணித்த கார் நேற்று முன்தினம் மாலை வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மாங்குளத்தில் கார் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

கஞ்சா மீட்கப்பட்டதை தொடர்ந்து, பொலிஸ் உத்தியோகத்தர், மைத்துனர், கொடி காமம் பகுதியை சேர்ந்த இளைஞன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் ஊரடங்கை மீறிய மேலும் எட்டு கடைகளுக்குச் ‘சீல்’



வவுனியா, செப். 26

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்டதாக வவுனியாவில் மேலும் 8 வியாபார நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.

கொரோனா பரவல் வவுனியாவில் தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்படல் மற்றும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது செயற்படல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வவுனியாவில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் நேற்று முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, சுகாதார அறிவுறுத்தல்களை மீறி மக்களை ஒன்றுகூட்டி வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

அந்தவகையில், தர்மலிங்கம் வீதியில் மூன்று புடவைக் கடைகளும், ஹொரவப்பொத்தானை வீதியில் மரக்கறி கடை ஒன்றும், கந்தசாமி கோவில் வீதியில் பாட்டா கடை ஒன்றும், பழைய பஸ் நிலையத்தில் தொலைபேசி விற்பனை நிலையம் இரண்டும், கண்டி வீதியில் பிரபல தனியார் இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றும் என 8 வர்த்தக நிலையங்கள் 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டன.

அதேவேளை, நேற்றுமுன்தினமும் ஹொரவப்பொத்தானை வீதியில் இறைச்சி விற்பனை நிலையம், தளபாட விற்பனை நிலையம், சந்தை உள்வட்ட வீதியில் பல்பொருள் விற்பனை நிலையம், பசார் வீதியில் விற்பனை நிலையம் ஒன்று என 4 வியாபார நிலையங்கள் தனிமைப்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வவுனியாவில் மேலும் இருவர் கொரோனா தொற்றால் காவு



வவுனியா, செப். 26

வவுனியா மாவட்டத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

சுகயீனம் காரணமாக மரணமடைந்த இருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மரணமடைந்தவர் களின் சடலங்களைச் சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக் கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (இ)

# தள்ளி விழுத்தப்பட்டு ஒருவர் படுகொலை

கொழும்பு, செப். 26

கொஹுவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுபோவில பிரதேசத்தில் இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒரு வர் கீழே தள்ளி விழுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பலபொகுன பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயது நபரே இவ் வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயம டைந்த நபர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 21 - 12 - 1943



உதிர்வு 25 - 09 - 2021

## சுப்பையா கந்தசாமி

மிருசுவில் தவசிக்குளத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா கந்தசாமி அவர்கள் நேற்று (25.09.2021) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், அனுராதா(ரஜினி), பிரதீபா, தர்மிளா(தேம்பா), லிங்கேஸ்வரன், கோமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா, வாகீசன், கிருஷ்ணகுமார், கலைவாணி, தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்தானலக்ஷ்மி, செல்வராஜா, மோகனராஜா, காலஞ்சென்ற பாலசுப்ரமணியம்(ஜெகன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,செந்தூரன், அனுராஜ், ஆதித்தன், அபேனுஜா, அனு, அர்ஜுன், பூமிஷா, ஆரூரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
லிங்கேஸ்வரன் - மகன்
+19786317662

தகவல்:
குடும்பத்தினர்.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX



11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-பகவதி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்
7.00 மணி : SPOTLIGHT - யாழ் மாவாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம் - தற்போதைய நெருக்கடிகளை எப்படி தாண்டுவது



10.00 மணி: நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஸ்ரீ ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு